# சுதந்திரன்
SUTANTIRAN

தொலைபேசி: 23411 விலை சதம் 25

வள்ளுவர் ஆண்டு 2004, சித்திரை 17உ (29—4—73) ஞாயிறு ரபி; அவ் 25 – புத்தகம் 26 இதழ் 20


இந்திய வம்சாவளியினருக்கு எதிராக


# பாரபட்சம், கெடுபிடி!

## தமிழர்கூட்டணி கண்டனம்
### இந்தியப் பிரதமரிடம் கோரிக்கை

இலங்கைப் பிரசைகளாக அல்லது இலங்கைப்பிரஜாவுரிமைக்கு தகுதியுள்ளவர்களான இந்திய வம்சாவளித்தமிழர்களுக்கு எதிராக சிங்கள அரசு கொடூரமான பழி வாங்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டுவருவதாக தமிழர் கூட்டணி கடுமையாக குற்றம் சுமத்தியுள்ளது.

இந்திய வம்சாவளித்தமிழர்கள் மத்தியில் பயத்தையும் பீதியையும் ஏற்படுத்தி, அவர்களை இந்தியப் பிரஜாவுரிமையை வலுக்கட்டாயமாக எற்றுக் கொள்ளச் செய்து நாடு கடத்தி விட இலங்கை அரசு படுமோசமான நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் இந்தியப் பிராவுரிமை இடாப்பை மீண்டும் திறப்பதற்கு இடமளித்து இலங்கை அரசின் இச்சதித்திட்

(4.ம் பக்கம் பார்க்க)



இலங்கைக்கு வருகை தந்துள்ள இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி, தனது பிள்ளைகள் ராஜிப், சஞ்சயன், ஆகியோருடன் மகிழ்ச்சியுடன் காணப்படுகிறார்!

## திருக்கோணேஸ்வரர் மீது கை வைத்தவர்கள் நிலை....!

தேவாரப்புகழும், வரலாற்றுப்பெருமையும் மிக்க இந்துக்களின் பழம்பெரும் பதியான திருக்கோணேஸ்வரத்தை இழித்துப்பழித்தவர்கள்—கைப்பற்ற எண்ணியவர்கள்—இறுதியில் என்ன ஆனார்கள் என்பதை வரலாறு காட்டுகிறது!

● திருக்கோணேஸ்வரத்திலுள்ள சிவலிங்கத்தை கத்தியால் சுரண்டிப்பார்த்த டச்சுக்காரத்தளபதி கொன்ஸ்ரான்டின் சா, கண்குருடாகி இறந்ததாக வரலாறு கூறுகிறது!

● கோணேஸ்வரத்தை இந்துக்களின் புனித நகராக்க மறுத்த காரணத்தினால், 1970ம் ஆண்டுத் தேர்தலில் டட்லி ஆட்சி மண்கவ்வியது!

● கோணேஸ்வரத்தை அபகரிக்க சதித்திட்டம் தீட்டிய ஆர். ஜி. சேனநாயக்கா புற்றுநோய்க்குப் பலியானார்.

இப்போது ...... திருக்கோணேஸ்வரத்தின் மீது உரிமை கொண்டாடி அதை பௌத்த தலமாக்க வேண்டும் என்று தீர்மானிக்க விருந்த பௌத்த காங்கிரஸின் தலைவர் டாக்டர் மலலசேகரா, அத்தீர்மானம் வருவதற்கு முன்னரேயே திடீரென கடந்த வாரம் காலமானார் .... !

கோணேஸ்வரரின் திருவருளை யார்தான் வெல்ல முடியும்?

——— சைவ அன்பன்.

# தமிழர் தந்தை செல்வாவை இந்திரா சந்திக்க வேண்டும்!
## 'துக்ளக்' ஏடு வலியுறுத்தும் கருத்து!

திருமதி இந்திராகாந்தி அவர்கள் இவ்வாரம் இலங்கைக்கு வருகிறாரல்லவா? அவர் இலங்கை வருவதையொட்டி 'சோ' அவர்களை ஆசிரியராகக்கொண்டு சென்னையிலிருந்து வெளிவரும் 'துக்ளக்' ஏடு 15-4-73 இதழில் பின்வரும் கருத்தைத் தீட்டியுள்ளது.

'நமது பிரதமர் இம்மாத இறுதியில் இலங்கை செல்கிறார் என்றும் இலங்கைப் பாராளுமன்றத்தில் உரை நிகழ்த்துவார் என்றும் செய்திகள் கூறுகின்றன — மிக்க மகிழ்ச்சி.

இலங்கைத் தமிழர்கள் மரணத்தின் நிழலில் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த நேரத்தில் பிரதமர் இலங்கை செல்கிறார் என்றதும் நமக்கு சில ஆனந்தக் கனவுகள் தோன்றுகிறது.

'இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையை அவர் முக்கியமாக எடுத்துக்கொள்வார் என்று நம்புகின்றோம். தமிழர் தந்தை செல்வநாயகத்தை அவர் கண்டிப்பாக சந்திக்கவேண்டும். இலங்கையில் 35 லட்சத்திற்கு மேற்பட்ட தமிழர்கள் வாழ்கிறார்கள்.

'ஒரு தமிழ் நாட்டின் ஜனத்தொகையில் பத்தில் ஒருபாகம் அங்கு இருக்கிறது. அவர்களது பிரச்சினையை விட்டு வெறும் உலகப் பிரச்சினையையே திருமதி. பண்டாரநாயகாவுடன் நமது பிரதமர் பேசுவாராயின் இங்குள்ள தமிழர்களுக்கு அது எரிச்சலைத்தரும்.

'இலங்கை நமக்கு அண்மையில் உள்ள நாடு என்பதால் அதன் உறவும் நமக்குத் தேவை என்றும் உலகப் பிரச்சினை எதையும் நிர்ணயிக்கும் சக்தி இலங்கைக்கு கிடையாது. அந்த இலங்கையில் போய் உலகப் பிரச்சினைகளைப் பற்றி மட்டும் பேசுவது நகைப்புக்கு இடமாகப் போய்விடும்.

'தமிழர்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினையை மத்திய அரசு கவனிப்பது இல்லை என்ற குற்றச்சாட்டு பல காலமாக இருந்து வருகிறது அந்தக் குற்றச்சாட்டுக்கு

(7ம் பக்கம் பார்க்க)

## தமிழர் கூட்டணி பாடசாலை; பி. பி. ஸி. யில் விமர்சனம்!

போதனைமொழியுரிமையை நிலைநாட்டும் புனித நோக்கத்துடன், இலங்கை அரசின் கல்விச்சட்டத்துக்கு விரோதமாக, புத்தூரில் தமிழர் கூட்டணி தொடங்கி நடாத்திவரும் தமிழ்ப்பாடசாலை பற்றி பிரிட்டிஷ் வானொலியில் (பி. பி. ஸி.) அண்மையில் விமர்சனம் ஒன்று நடத்தப்பட்டது.

இலங்கையின் கல்வித்துறையில் தமிழ்ப்பிள்ளைகள் மீது சிங்களத்தை திணிக்க கல்வியமைச்சு எடுத்துவரும் நடவடிக்கைகளுக்கு எதிராகவே தமிழர் கூட்டணியினரால் இப்போட்டிப் பாடசாலை நிறுவப்பட்டுள்ளதாக இந்த செய்தி விமர்சனத்தில் குறிப்பிடப்பட்டது

இலங்கை அரசு, சிறுபான்மை இன மக்களை புறக்கணித்து வருகிறது என்று இதனால் சிறுபான்மை மக்கள் அதிருப்தியும் கவலையும் கொண்டிருக்கிறார் என்றும் பி. பி. ஸி. இந்த விமர்சனத்தில் மேலும் தெரிவித்தது.

# குடியரசு நாள் தமிழன் கரிநாள்!

சிங்களக் குடியரசு நாளான மே 22-ம் நாளை தமிழ் ஈழமெங்கும் கரிநாளாக துக்க நாளாக அனுட்டிக்கப்படவிருக்கிறது இத்துக்க தின அனுட்டானத்துக்கு வேண்டிய சகல ஏற்பாடுகளையும் தமிழர் கூட்டணியின் திட்டக்குழு இப்போது தயாரித்து வருகிறது.

மே 22-ம் நாளை தமிழ்மக்கள் துக்க நாளாக அனுட்டிக்க வேண்டுமென்றும், அன்று நடைபெறும் அரசாங்க வைபவங்கள், கொண்டாட்டங்கள் யாவற்றையும் பகிஷ்கரிக்குமாறு மாணவர்கள் பெற்றோர்கள் பொதுமக்களைக் கேட்டுக்கொள்வதென்றும் மே 19, 20, 21ந் திகதிகளில் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் முக்கிய நகரங்களில் பகிரங்கக் கூட்டங்களை நடத்துவதென்றும் 22. 4. 73ல் யாழ்ப்பாணத்தில் கூடிய தமிழர் கூட்டணி தீர்மானித்துள்ளது.

(7ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

# சிறுபான்மை மக்களின் நம்பிக்கைக்குரிய அரசியல் தலைவர்களை மதித்தவர் டட்லி!

## முன்னாள் பிரதமரின் இறுதிச் சடங்கில் தமிழ்மக்கள் சார்பில் நவம் ஆற்றிய உரை!

'நீதி, நேர்மை, கண்ணியம் ஆகிய பண்புகளும் நிரம்பிய ஒரு சிறந்த ஜனநாயகவாதிக்கு சத்திய சீலருக்கு, அன்பும், கண்ணியமும் நிறைந்த தர்மவானுக்கு கர்ம வீரருக்கு இறுதி மரியாதை செலுத்தும் இந்த வைபவத்திலே அந்த உத்தமரின் மீது அன்பும், அளவில்லாப் பாசமும், வைத்திருந்த இந்த நாட்டு தமிழ் மக்களின் சார்பில் சில வார்த்தைகளைப் பேச வாய்ப்புக் கிடைத்தமைக்கு நான் பெரிதும் பெருமை அடைகிறேன்.

இன்று அந்த அன்புருவத்தின் இறுதி யாத்திரையைக் காண, நாட்டின் மூலை முடுக்குகளிலிருந்தும், சொல்லொணாக் கஷ்டங்களுக்கு மத்தியிலே, பல இலட்சக் கணக்கான குழந்தைகள், சிறுவர்கள், இளைஞர்கள், யுவதிகள், தாய்மார்கள் கண்ணீரும், கம்பலையுமாக வீதிகள் தோறும் நிற்கும் காட்சி, அவர்கள் விழிகளிலே கண்ணீரும் மெய்களிலே செந்நீரும் அழுகையும் புலம்பலும், விம்மலும் உள்ளத்தை நெகிழவைக்கிறது.

இந்தக் காட்சி அமரர் டட்லி பாமர மக்களின் உள்ளத்திலே எவ்வளவு தூரம் தனக்கென ஒரு இடம் பெற்றுள்ளார் என்பதையே படம் பிடித்துக்காட்டுகிறது.

இந்த நாட்டிலே வசிக்கும் பல இன மக்களை ஐக்கியமாகவும் ஒற்றுமையாகவும், ஒன்றுபடுத்துவதின் மூலமே இந்த நாடு வளர்ச்சியடைய முடியும் என்பதை அனுபவ ரீதியாக, கண்டு அந்த ஐக்கியத்தை, நிலை நாட்டுவதற்காக, அயராது உழைத்தவர். இன ஐக்கியத்தை இனிய பேச்சுக்களால் மட்டும் ஏற்படுத்த முடியாதென்றும் சிறுபான்மை மக்களின் அடிப்படை அரசியல் பிரச்சினையை தீர்த்து வைப்பதன் மூலமே இந்த ஐக்கியத்தை நிலைநாட்ட முடியும் என்ற நம்பிக்கை கொண்டவர்.

சிறுபான்மை மக்களுடைய சம்மதத்தின் பேரிலேதான் அவர்கள் நம்பிக்கை வைத்திருக்கின்ற அரசியல் தலைவர்களோடு கலந்துரையாடித்தான் அவர்களுடைய அரசியல் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்ற கருத்தைக் கொண்டிருந்தவர் உத்தமர் டட்லி அவர்கள். இந்த வழியில் அவர் எடுத்த முயற்சி பலகாரணங்களை முன்னிட்டு விரும்பத்தக்க பலனைக் கொடுக்காவிட்டாலும் எக்காலத்திலும் தமிழர்களுடைய உள்ளங்களில் அவருக்கு மதிப்பான தனியிடம் இருந்தது என்பதற்கு



கடந்த ஒரு வாரகாலமாக தமிழ்மக்கள் காட்டிய கவலையே சான்றுரைக்கும்.

அமரர் டட்லி ஒரு தெய்வ பக்தன். பௌத்தமத புனித கொள்கையின் படியே வாழ்க்கை நடத்தினார். பௌத்த சங்கத்தின் அன்புக்கும் மதிப்புக்கும் உரியவரானார். அதே வேளையில் சகல மதங்களுக்கும் மதிப்புக்கொடுத்தவர். நாட்டிலுள்ள சகல மதங்களையும் வேற்றுமையின்றி பேண வேண்டும் என்ற கருத்துடையவர்.

எல்லாவற்றிலும் முக்கியமாக ஜனநாயகத்தின் சின்னமாக விளங்கினார். ஜனநாயகத்தின் மூலமே ஒரு தேசத்தை கட்டி எழுப்ப முடியும் என்பதை நம்பி அதையே தன் இலட்சியமாக கொண்டு உழைத்து வந்தார்.

கடந்த அரை நூற்றுண்டுக் காலத்தில் சுதந்திரமடைந்த நாடுகள் பல ஜனநாயக கட்டுக்கோப்பை இழந்துவிட்டதை நாம் இன்று காண்கிறோம். ஜனநாயகம் பேசிய தலைவர்கள் மனம் மறியாதையும் பார்க்கின்றோம். ஆனல் அமரர் டட்லி மக்களின் உள்ளக் கிடக்கைகளுக்கும் அபிலாசைகளுக்கும் தடைபோடா வண்ணம் அரசாங்கம் இருக்கவேண்டும் என்று ஆசைகொண்டு ஜனநாயக ஆட்சிக்கு முக்கியத்துவம் அளித்தார்.

ஏனையோரும் ஜனநாயகத்தை மதித்து ஜனநாயகத்தின் அடிப்படையிலேயே மக்களை வழி நடத்தவேண்டும் என்று ஆசைப்பட்டவர். தனது வாழ்க்கையை அதற்காக அர்ப்பணித்தவர். அவர் தனது இறுமூச்சுவரை ஜனநாயக தத்துவத்திற்காக உழைத்தவர். ஆசியாக் கண்டத்திலேயே, இதுவரை உருவாகியிராத ஒரு ஜனநாயக வாதி, உலகில் ஜனநாயகம் இருக்கும் வரை அவர் வாழ்வார்.

பெற்ற சுதந்திரம் பேணிக்காக்கப் பட வேண்டுமானல் இந்த நாட்டில் ஜனநாயக ஆட்சியுடன் பொருளாதார சுதந்திரமும் வேண்டும். அது அவசியம் என்பதையும் அடிக்கடி வலியுறுத்தினார். இந்த நாட்டின் பொருளாதார சுபீட்சம், விவசாய அபிவிருத்தியிலே தான் தங்கியுள்ளது என்பதை உணர்ந்து அதனுடைய வளர்ச்சிக்காக தனது வாழ்நாளில் பெரும் பகுதியைச் செலவழித்தார்.

இந்த நாட்டின் விமோசனம் உணவு உற்பத்தியில் தான் தங்கியுள்ளது என்பதை நாட்டு மக்களுக்கும், விவசாயிகளுக்கும் இடித்து இடித்து கூறினார். உத்தியோகமோகம் கொண்டிருக்கும் இளைஞர்கள் எல்லாம் காடுமேடுகளில் விவசாய மூலம் பசுமைப் புரட்சியில் ஈடுபடுத்தினர் இதற்குஎமது பகுதியிலுள்ள விஸ்வமடு, முத்துஐயன்கட்டு, இளைஞர் குடியேற்ற திட்டங்களும், நாடு முழுவதுமுள்ள இது போன்ற இளைஞர்கள் திட்டமும் இந்த இளைஞர்கள் விவசாயத்தில் காட்டும் ஆர்வமும் அமரர் டட்லியின் பசுமை புரட்சியின் அழியாச் சின்னங்களாக விளங்குகின்றன.

இவருடைய மறைவு நம் நாட்டிற்கு மட்டுமல்ல உலக நாடுகளுக்கே ஏற்பட்ட பேரிழப்பாகும். கடந்த சில தினங்களாக உலக புதினத் தாள்கள் இவரின் மரணத்திற்குக் கொடுத்த முக்கியத்

(7-ம் பக்கம் பார்க்க)

---

## சுடச் சுட . . .

'பிறரை விரோதித்து உரிமைகளைப் பெறமுடியாது.'
—கம்யூ. பிரமுகர்

—தமிழ் மக்கள் தமது உரிமைகளைச் சமாதானமாகப் பல சந்தர்ப்பங்களில் கேட்ட போதும் முயற்சிகள் யாவும் தோற்கடிக்கப்பட்ட போதும் இந்தப் பிரமுகர் எங்கிருந்தாரோ?

''தமிழர் சிங்களவர் உறவுக்காக சிறு வயது முதலே பாடுபட்டேன்.''
—சமூக சேவைகள் மந்திரி

—தமிழ் மக்களின் கோரிக்கைகள் யாவற்றினையும் அரசியல் அமைப்பு நிர்ணய சபையிலும் தேசிய பேரவையிலும் எதிர்த்தவர்கள் யாழ். வந்ததும் தமிழ் மக்களுக்காகத் தேனுகப் பேசுகிறார்கள். இது ஏனே?

''500 ஆண்களுக்குப் பின் தமிழுக்கு அந்தஸ்து.''
—அஸீஸ்

—சிங்களத்துக்கு அரசியலமைப்பில் அந்தஸ்து ஆனல் தமிழுக்கு அமைச்சர்களின் விருப்பு வெறுப்புக்கேற்ப உருவாக்கி அழிக்கக்கூடிய சாதாரண சட்ட அந்தஸ்து. இதில் தமிழ்மக்கள் மகிழ்ச்சி அடைய என்ன இருக்கிறதோ?

''சிங்களவருக்கு மொழிப் பற்றை உணர்த்தியவர் ஒரு தமிழரே'' —தினகந்துரை

—இராமநாதனின் சேவையின் பலனைச் சிங்கள மக்கள் தமிழ் மக்களுக்கு அளிக்கிறார்களே.

''இங்கு வந்து எங்கள் நாட்டை ஆக்கிரமித்துக் கொண்ட தமிழர்களுக்கு தங்கள் மொழிக்கு உரிமை கேட்பதற்கு எவ்வித உரிமையும் இல்லை''
—கனிகமுவ எம்.பி.

—விஜயன் - குவேனி சரித்திரம் எமக்குத் தெரியாத தொன்றல்லவே.

''நாட்டின் எந்தப் பகுதியிலும் தமிழ்மொழியில் வழக்காடலாம்.''
—பீலிக்ஸ்

—அமைச்சர்களின் வெறுப்பு விருப்புக்கியைய தமிழர்களினதும் தமிழினதும் உயிர் ஊசலாடுகிறது.

''சமூக சேவைகள் அமைச்சர் அச்சுவேலியில் தமிழ் கவிதை பாடினர்'' —செய்தி

—தமிழை வாழ்த்தும் கவிதையா? தமிழைத் தாழ்த்தும் கவிதையா?

''இந்த நாட்டில் உள்ள மக்கள் அனைவருக்கும் சகல உரிமைகளும் பொதுவானதாகவும் சமத்துவமானதாகவும் இருக்கவேண்டும்.''
—பீலிக்ஸ்

—பேச்சுப் பல்லக்கு தம்பி கால் நடை!

''தமிழரை ஒதுக்கும் நோக்கம் அரசுக்கோ சிங்களவர்க்கோ இல்லை.''
—பிரதி விடமைப்பு மந்திரி

—பசுத்தோல் போர்த்தி வருகிறது புலி. எச்சரிக்கை.
—பிரதி வீடமைப்பு மந்திரி

''தமிழ் மக்களின் குறைகளைக் கண்டறிய மந்திரிகள் வருகிறார்கள்.''

—தமிழ்இன, தமிழ்மொழி ஒழிப்பின் அரசு விட்டுச் சென்ற குறைகளைத்தானே கண்டறிய மந்திரிகள் இங்கு வருகிறார்கள்?

''கறுப்புக் கொடியால் பிரச்சினை தீராது''— பிரதி
—பிரதி அமைச்சர் கருணரத்தின.

—பிரச்சினைகள் தீர்க்கப் படலாகாது என்னும் மனப்பான்மை அமைச்சர்களிடம் இருக்கும்வரை எவ்வாறு பிரச்சினைகள் தீரும்?

''இன்று சில அரசியல் வாதிகள் தம் சொந்த நலன்களுக்காக, இன பேதங்களை வளர்த்து வருகிறார்கள்.''
—பிரதி தபால் அமைச்சர்

—இதனை ஆரம்பித்து வைத்த பெருமை காலம் சென்ற பிரதமர் பண்டாரநாயக்காவையே சாரும்.

''யாழ்ப்பாணத்தில் எனக்கு நண்பர்கள் அதிகமாக இருக்கிறார்கள்.''
—பிரதி தபால் அமைச்சர்

—''அடிமை''க்கு மறு சொல் 'நண்ப'ரோ?

''இன்றைய இளைஞர்கள் மத்தியில் கொந்தளிப்பு இருப்பது உண்மையே.''
—வி. பி.

—எம். ஏ. மூனாயின் அரிய தொரு கண்டுபிடிப்பு. தங்கப் பதக்கம் வழங்கச் சிபாரிசு செய்கிறோம்.

''இரு உம்ம் தொழிலாளர்களின் தொழில் நீதிமன்ற மனுக்கள் நிராகரிப்பு. சிங்களத்திலேயே இம்மனுக்கள் தயாரிக்கப்பட்டிருத்தல் வேண்டுமென தொழில் நீதிமன்றம் காரணம் அறிவிப்பு.''
—செய்தி.

—சமதர்மத்தின் அழகு பாரீர். தொழிலாளர், விவசாயிகள், பாட்டாளிகளின் அரசல்லவா, இது?

''இலங்கையின் சுதந்திரத்திற்காக நாம் அனைவரும் இனபேதமின்றிப் போராடியதுபோல் ஏன் இந்த நாட்டின் முன்னேற்றத்திற்காகவும் இன, மொழி, மத வேற்றுமைகள் இன்றிப்போராட முடியாது?''
—பிரதி தபால் அமைச்சர்

—இனபேதமின்றிச் சுதந்திரத்திற்காகப் போராடியதற்காகத் தமிழ் மக்கள் வருந்துகிறார்கள் என்பதனை இந்த அமைச்சர் அறி[illegible]
—'கதிர்'

---

## என் எழிற் தமிழே

(வந்தாறுமூலை— அண்ணுதாசன்)

சோகமெனும் பெருங்கடலித் தத்தளித்து,
சொக்கியுடல் சோர்வுற்றுக் கிடக்குமெந்தன்,
வாளெடுத்துப் போர்முனையிற் குதித்து அங்கே,
வருகின்ற மாற்றரை வரிசையாக
சாகடித்துச் சங்கதனை முழங்கி நின்று,
சரமாரி யாற் பகையை ஒழிக்கும் வீரச்
சோதரரைப் பெற்றெடுத்த தமிழேயுந்தன்
சொந்தநிலை சந்ததியில் யானதென்ன?

நாலறிந்தேன் என்தாயே நடந்தவேலை
நல்லவரைப் பெற்றெடுத்த வயிற்றிலிந்தச்
சாபமிடும் இயற்கையதன் சதியினலே
சதிகாரர் சிலர்வந்து பிறந்து இன்று,
ஆபமிடுகின்றுன் துரோகிக்கு
தூக்கிவிடு வாரென்ற எண்ணத்தாலே,
பாவமிது என்றின்னும் பார்க்கமாட்டோம்
பாவிகளைப் பதைபதைக்கச் செய்தேயாவோம்

ஆ... சண்டன் துப்பற்ற துடுக்கன் பாரு,
துப்பரவாய் மானமது அற்றேன் அந்தோ!
பாதமது நக்கியதன் பலனய் வந்த
பதவியிலே அமர்ந்திருந்து பகட்டுப் பேசி,
சாதனைகள் புரிந்திட்டேன் அடடா இந்தத்
தமிழர்நிலை என்னலே உயர்ந்ததேடா.
வேதனையா தமிழுக்கு இல்லையில்லை,
வெறுங்கதைதான் இவையென்று கூறுகின்றுன்

வேதனைதரன் என் தாயே வேட்டு வைப்போன்
வேறிருவன் இல்லையவன் எவ்வினத்தின்.
சோறுதனை உண்டவன்தான் சொந்த அண்ணன்
சொட்டு ரத்தம் அவனுடலில் வேறுபாடு
நாறியற்றுக் கிடக்கின்றன் நக்குகின்றுன்
நயமான உரைபேசி நடிக்கின்றுனிப்
பாவிகளைப் பற்றிடுவேன் எந்தன் கையால்,
[illegible]த்திடவே சொல்லிடுவேன் உதிக்கும், வெள்ளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழுரிமையை நிர்ணயிக்கும் அதிகாரம் தனியொரு அமைச்சரின் கரங்களில்!

## தமிழ்மொழிச்சட்டம் பிரயோசனமற்றது! அரசியல்சட்டம் திருத்தப்பட வேண்டும்!

## கடைசிச் சந்தர்ப்பத்தையும் தவறவிட்டால் சிங்கள மக்கள் வருந்தவேண்டி நேரிடும்!

பண்டாரநாயக்கா — செல்வநாயகம் உடன்படிக்கை எழுதப்பட்ட நேரத்தில், நாட்டில் தேசிய ஒற்றுமையை உருவாக்குவதற்கு நல்ல வாய்ப்பு ஏற்பட்டது. ஆனால் அவ் ஒப்பந்தத்திற்கு எதிராக யூ. என். பி. நடாத்திய விஷமத்தனமான பிரசாரத்தினால் அந்த வாய்ப்பு இழக்கப்பட்டது. றோஸ்மீட் பிளேசில் உட்கார்ந்த 200 புத்த குருமார்கள், அந்த ஒப்பந்தம் கிழித்தெறியப்படக் காரணமாக இருந்தார்கள்.

பிரச்சினைகளை சமரசமாகத் தீர்த்து வைப்பதற்கு இரண்டாவது சந்தர்ப்பம் புதிய அரசியல் திட்டம் உருவாக்கப்பட்ட போது ஏற்பட்டது. நல்லெண்ணமும், நியாயமும் நிலவியிருக்க வேண்டிய ஒரு சந்தர்ப்பமாக இது இருந்தது: (சிங்களம் மட்டும்) மொழிச்சட்டம் அரசியல் சட்டத்தின் ஓர் அங்கமாக இடம் பெறுமல், செய்திருக்க முடியும். தொடர்ந்து சாதாரண சட்டமாக அது இருந்திருந்தால், தேசிய பேரவையில் ஒரு சாதாரண பெரும்பான்மையுடன் சிங்களம்மட்டும் சட்டத்துக்கு தேவையான திருத்தம் கொண்டுவரப்பட முடியும். ஆனால் இப்போது அது, அரசியல் சட்டத்தில் எழுதப்பட்டு விட்டது.

அந்தநிலையில் ஆகக்குறைந்தது செய்யக்கூடியது என்னவெனில், அரசியல் சட்டத்தின் ஓர் அம்சமாக தமிழ் மொழி விசேட ஏற்பாடுகள் சட்டத்தையும், அச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டிருந்த பிரமாணங்களையும் சேர்த்திருக்கவேண்டும்.

பிரமாணங்கள் இன்றி தமிழ் மொழி விசேட சட்டம் பிரயோசனமற்றது அமைச்சர் எந்த நேரத்திலும் தமிழ்மொழிப்பிரமாணங்களை வாபஸ்பெற்று, தமிழ் மொழிச்சட்டத்தை அர்த்தமற்றதாக்கிவிடமுடியும். இதுதான் தமிழ் மொழியின் இன்றைய நிலைமை.

வடக்கு, கிழக்குமாகாணங்களில் தமிழை உபயோகிப்பதுபற்றி அடிக்கடி பேசப்படுகிறது! அரசியல் சட்டத்தின் 9வது சரத்துப்படி எல்லாச்சட்டங்களும் சிங்களத்திலேயே ஆக்கப்படவிருக்கிறது என்பதை இப்படிப் பேசுபவர்கள் மறந்துவிடுகிறார்கள். மொழிபெயர்புக்கள் ஒரு போதும் சட்டங்கள் ஆகாது. எனவே யாழ்ப்பாண நீதிமன்றத்தில் கூட சிங்களத்தை வாசிக்கவும் விளங்கிக்கொள்ளவும் முடியாதஒருவரால் ஒருவழக்கை திறமையாக நடத்துவது சாத்தியமற்றது.

பலகாலமாக எதிர்பார்க்கப்பட்ட நீதிமன்ற மொழி சட்டம் இப்போது நிறைவேற்றப்பட்டுவிட்டது. ஜே. ஆர். ஜெயவர்தனவின் கூற்றுப்படி — "வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள எந்த நீதிமன்றத்தில் தமிழை அமுல்படுத்த வேண்டும் என்பதை தீர்மானித்து உத்தரவிடும் அதிகாரத்தை அந்த மகோதா அமைச்சரின் கைகளில் ஒப்படைக்கிறது."

லாம் என்பதை தீர்மானிக்கும் பொறுப்பு இப்போது அமைச்சரிடம் கையளிக்கப்பட்டிருக்கிறது!

தமிழ்மொழி விசேட சட்டத்தைப் போலவே — நீதி மன்ற மொழி விசேட சட்டமும் — எவ்வித மொழியுரிமையையும் தமிழ் மக்களுக்கு அளிக்கவில்லை. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கூட தமிழர்களுக்கு எவ்வளவு உரிமை இருக்கவேண்டும் என்பதை தீர்மானிக்கும் உரிமை

### வழக்கறிஞர் ஏ. சி. நடராசா

(ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி முன்னாள் உபதலைவர்)

வடக்கு கிழக்கு மாகாணங்களின் நீதிமன்ற மொழிப் பிரச்சினையில் தீர்மானிக்க வேண்டிய பொறுப்பை அரசியல் திட்டம், தேசியபேரவையிடம் கையளித்திருந்தது. தேசிய பேரவை, இப்போது அந்த அதிகாரத்தை அமைச்சரின்கையில் கொடுத்திருக்கிறது. வடக்கில் அல்லது கிழக்கில், அல்லதுவடக்கிலும் கிழக்கிலும் எந்த நீதிமன்றம் தமிழில் இயங்க அமைச்சரிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏதாவது ஒரு காலத்தில், வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள எந்த ஒரு நீதிமன்றமாவது தமிழில் இயங்கக்கூடாது என்று அமைச்சர் தீர்மானித்தால், நீதிமன்றங்களில் தமிழுக்கு முடிவு கட்டப்பட்டுவிடும். தேசிய பேரவையும் அதற்கு அங்கீகாரம் அளித்து விடும்.

நாட்டில் ஒற்றுமையை கட்டியெழுப்ப கிடைத்த இரு சந்தர்ப்பங்கள் எப்படி நாசமாக்கப்பட்டன என்பதைக் குறிப்பிட்டேன். விட்ட பிழைகளைத் திருத்துவதற்கு கடைசியாக ஒரே ஒரு சந்தர்ப்பம் உண்டு.

இப்போது அரசாங்கத்துக்கு பெரும்பான்மை பலம் இருக்கும் போதே புதிய அரசியல் திட்டத்தை திருத்துவதுதான் அதற்கு ஒரே வழி. எதிர் காலத்தில் பதவிக்கு வரும் எந்த அரசுக்கும் மூன்றில்இரண்டுபெரும்பான்மை கிடைக்கவும் வாய்ப்பில்லை.

'நாங்கள் உங்களுக்காக அனுதாபப் படுகிறோம்— ஆனால் உங்களுக்கு உதவி புரிய எங்களுக்கு அதிகாரம் கிடையாது' — என்று வருங் காலத்தில் பதவிக்கு வரும் எந்த அரசாங்கமும், தமிழ் மக்களைப் பார்த்து கூறக் கூடும்.

தென்னிலங்கையில் உள்ளவர்களுக்கு இது ஒரு கௌரவப் பிரச்சினையாக இருக்கலாம் — ஆனால், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ளவர்களுக்கு இது வாழ்வுப்பிரச்சினையாக இன்று இருக்கிறது.

காலஞ் சென்ற பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டீ. பண்டாரநாயக்கா கூறினார் — "மொழிதான் ஓர் இனத்தின் உயிரோட்டமானது" என்று!

இந்தக் கடைசி சந்தர்ப்பமும் பாழடிக்கப்பட்டால் — புதிய அரசியல் சட்டம் நிறைவேற்றப்பட்ட நாளை எண்ணி சிங்கள மக்கள் தாங்களே வருந்தும் நிலை ஏற்படும் என்பதில் எனக்கு சிறிதும் ஐயமில்லை.

(17—4—73 டெயிலிநியூசில் வெளிவந்த கட்டுரை)

# என்றோ இழக்கப்போகும் உயிரை இன்ப சுதந்திரத்துக்காக இழப்போம்!

## தமிழ் நம் உயிர் — அதைக் காப்பது நம்கடமை!

சுதந்திரம் ஒவ்வொரு உயிரினதும் பிறப்புரிமை. சுதந்திரம் இல்லாமல் ஊர்வன தொடக்கம் மக்கள் வரை வாழவிரும்ப மாட்டார்கள். உலகில் உள்ள எந்த உயிர்தானும் தான் விரும்பியபடி நடப்பதையே விரும்புகின்றது. மக்களைப் பொறுத்தவரையில் மற்றவர்களுக்கு தீமை இல்லாத விதத்தில் தான் விரும்பியபடி நடப்பதை சுதந்திரம் என்ற சொல் குறிப்பிடுகின்றதென்றால் மிகையாகாது. ஆதலால் சுதந்திரம் என்பது ஒவ்வொரு மனிதனதும் பிறப்புரிமை. அதனை இன்னொரு மனிதன் கட்டுப்படுத்துவதை அவன் விரும்ப மாட்டான். அது மனித இயற்கை. இதன் வண் நான் சுதந்திரம் என்று குறிப்பிடுவது ஒரு தனிப்பட்ட மனிதனோ தனிப்பட்ட இனமோ தன்மொழியைப் பேச அம்மொழியில் சகல கருமங்களையும் செய்ய ஆட்சியுடன் தொடர்புகொள்ள, தான் விரும்பும் மதத்தைப் பின்பற்ற, தன் கலை கலாச்சாரத்தை வளர்க்க உள்ள உரிமையாகும்.

இன்று உலகில் பல நாடுகளில் குறிப்பாக சமதர்ம நாடுகளில் இனங்களின் அபிலாசைகளையும் சுதந்திர வேட்கையையும் ஆட்சியினர் பெருந்தன்மையுடன் ஏற்றுக்கொண்டு சகல மக்களினதும் மொழி இன கலாச்சார உரிமைகளை வழங்கியுள்ளார்கள். ஆனால் சில இன்னதீனம் நிறைந்த நாடுகளில் சிறுபான்மை மக்களின் அடிப்படை ஜீவாதார உரிமைகளைப் பறித்து அவ்வின மக்களை படிப்படியாக அடக்கி யொடுக்கி அவர்களை அழித்தொழிக்க கங்கணம் கட்டியுள்ளன. அப்படியான இனத்துவேஷமும் பாமரத்தனமும் கொண்ட ஆட்சிப் பீடங்கள் உள்ள நாடுகளில் இலங்கை குடியரசும் ஒன்று.

இன்று இந்நாட்டில் அரசியல் வாதிகள் உதட்டில் ஊசாடுவது சமதர்மம் பொதுவுடமை. ஆனால் அவர்கள் உள்ளத்தில் உறவாடுவது தமிழ் இனத்தை அடக்கல், அழித்தல் ஒடுக்கல் ஆகிய கொள்கைகள் தான். இன்று இலங்கையில் எங்கே எந்த மூலையில் பார்த்தாலும் எம்மின மக்கள் அடக்கப் படுகின்றார்கள் பரிகசிக்கப் படுகின்றார்கள், கள்ளத்தோணி என்ற பட்டம் சூட்டப்படுகின்றார்கள்.

தமிழன் என்ற ஒரே ஒரு காரணத்துக்காக அரசாங்க நியமனங்கள் அவனுக்கு மறுக்கப்பட்டுச் செல்கின்றன; இவனைக் குறைகூறுதன்மையில் வற்புறுத்தப்படுகின்றது. அரசாங்கத்துக்கு தமிழில் கடிதம் எழுதினால் அதற்கு தனிச் சிங்களத்தில் பதில். அவ்வளவு அரசியலுக்கு தமிழ் மொழியும் தமிழ் இனமும் சிரழிக்கப்பட்டு சிதைக்கப் படுகின்றது என்பதைக் காணும்போது எந்த ஒரு தமிழ் மகனும் குறிப்பாக எம்போன்ற இளைஞர்கள் கண்ணைமூடிக்கொண்டு சும்மா இருந்துவிட முடியாது.

நாம் மொழியை விழிபாகக் கருதாமல் உணர்ச்சி பற்ற மரக்கட்டைகளாக இருப்போமானால் நாம் எம்மைக் கழிக்கும் மரபுக்கு பெருந்துரோகம் செய்தவர்களாவோம். எம்முன்னோர்கள் எம்மொழியைப் பாதுகாப்பதில் கண்மூடிமௌனிகளாக இருந்தார்கள்—அதன் பயன் தனித்தமிழ் பிரதேசங்களாக இருந்த புத்தளம் நீர்கொழும்புப் பகுதிகளை கடந்த கால்நூற்றாண்டுக்காலத்தில் இழந்தோம். இன்று அங்கே தந்தைபெயர் நவரத்தினம் மைந்தன் பெயரோ நவரத்தின. அத்தகைய நிலைக்கு கன்னித்தமிழ் சிங்களத்தால் சீரழிக்கப் பட்டுள்ளது. இதனை நோக்கும்போது

### பொ. கனகராசா

நாம் எம்மால் ஆவது எல்லாம் இன்று இருந்துவிட்டால் அடுத்துவரும் ஆண்டுகளில் தமிழ்க் குரலே ஈழத்தில் ஒலிக்காது என்றே கருதுகின்றேன்.

ஆகையால் எம் விழியனைய மொழியை பிறந்த பிரதேசத்தை எங்கள் ஒப்பற்ற கலைகலாச்சாரத்தை காப்பாற்ற ஒவ்வொரு தமிழனும் முன்வரவேண்டும்; 'என் உயிரும், உடலும் கன்னித் தமிழுக்கு' என்று சபதம் எடுத்துக் கொள்ளவேண்டும். எங்கே எங்கள் மொழி தாழ்த்தப்படுகின்றதோ அங்கே நாம் போராடவேண்டும். எங்கே எம் இனம் நசுக்கப்படுகின்றதோ அங்கே நாம் களமெடுக்க வேண்டும். எங்கே எங்கள் கலாச்சாரம் அழிக்கப் படுகின்றதோ அங்கே நாம் பணிபுரிய வேண்டும். "செய் அல்லது செத்துமடி" என்றார் அண்ணல் காந்தி. அவர் சொல்லிய அந்த வழியில் எம்மொழிகாப்போம அல்லது மொழிக்காக செத்து மடிவோம்.

எங்கே எங்கே இனத்தின் விடுதலைக்காக போராடும் தலைவர்கள் தோன்றுகின்றார்களோ அங்கு துரோகிகளும் தோன்றுகின்றார்கள். இது வரலாறு கண்ட உண்மை. இவ்வுண்மைக்கு எம்மினம் விதிவிலக்கா? சுயநல நோக்கத்திற்காகவும் தமக்கும் தம்மைச்சார்ந்தோருக்கும் பட்டம், பதவி, பணம் பெற்றுக்கொடுப்பதற்காகவும் சுதந்திரத்திற்காக உழைத்து வரும இனத்தை அதுவும் தானும் அந்த இனத்தில் உதித்தவன் என்று கூடப் பாராமல் இனத்தைக் காட்டிக்கொடுப்பவனை, இன ஒற்றுமையை அழிக்க முயல்பவனை துரோகிகள் என்று கூறுவதல் உடன் பிறந்தே கொல்லும் வியாதி எனக் கூறுவது மிக மிகப் பொருந்தும்.

தமிழ்த் தலைவர்கள் தம் வேற்றுமைகளை மறந்து இன மொழி விடுதலைக்காகப் போராடும் நேரத்திலும் ஒரு சில துரோகிகள் எலும்புத் துண்டுக்காக தன் மொழியை மறந்து தன் இனத்தை மறந்து மண்டியிடுகின்றார்கள் என்றால், இன உணர்வுகளை சூறையாடுகின்றார்களென்றால் தமிழுணர்வுடன் பிறந்த எவரும் கவலைப்படாமல் இருந்து விட முடியாது. இத்தகைய துரோகிகளை சமுதாயத்தில் இருந்து ஒதுக்குவது ஒவ்வொரு இன மொழிப் பற்றுள்ளவரதும் கடமையாகும்.

"அஞ்சினவனுக்கு நூறு மரணங்கள் வரும் அஞ்சாதவனுக்கு ஒரு மரணம் தான் வரும்" என்றார் யூலியஸ்சீசர். நாம் இந்த உலகில் எப்போது உதித்தோமோ அன்றைக்கே இன்றோ நாளையோ என்றோ ஒரு நாள் இறப்போம் என்பது உறுதியாகிவிட்டது. ஆறு வயதுப் பிள்ளையும் இறக்கும் போது உலக இசைகளை ஊற்றாக அனுபவித்து இறக்கவில்லை. அறுபதுவயதுக் கிழவரும் இறக்கும்போது உலக ஆசைகளை அனுபவித்து இறக்கவில்லை. ஆயிரம் ஆண்டுகள்தான் வாழ்ந்தாலும் உலக சுகங்களை ஆசைகளை மனிதன் அனுபவித்து இறப்பான் என்றுகூற முடியாது.

என்றோ ஒருநாள் இறக்கவிருக்கும் உயிரை இன்றே சுதந்திரத்துக்காக, ஓர் இனத்தின் விடுதலைக்காக, மொழிக்காக தியாகம் செய்வது எவ்வளவோ மேலானது. அத்தியாகத்தையும் தியாக வரலாற்றையும் காலமோ கடலோ செல்லோ கரைந்துவிட முடியாது.

"நூறுவருடங்கள் ஆடுபோல் வாழ்வதிலும் பார்க்க ஒருநாள் சிங்கம்போல் வாழ்வது சிறப்பானது" என்று கூறினார் இத்தாலியத் தலைவர் வீரர் முசோலினி. அத்தகைய நூறுவருடங்கள் ஆடுகள்போல் உணர்ச்சியற்ற மரக் கட்டைகளாக இன மொழி உரிமைகள் அற்ற அடிமைகளாக இருப்பதிலும் பார்க்க ஒரு நாளைக்கு எம்பலம் அத்தனை

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## மலையகத்தமிழன் கண்ணீர்!

ஈழத்தின் எழிலோவியமாக திகழுவது மலையகம்! காண்போரைச் சுண்டியிழுக்கும் இயற்கையழகு கொஞ்சிட பச்சைப் பசேலென்ற பசுமைக் காட்சிகளும், கவின்பெறு ஓடைகளும் மலையகத்தை அழகுபடுத்துகின்றன.

வெறும் எழில் மட்டுமல்ல — இந்நாட்டுக்கு அந்நியச் செலாவணியைத் தேடித் தருகின்ற தேயிலையும், ரப்பரும் திரண்டு வளர்ந்து நிற்பதும் அங்கேதான்!

ஒருகாலத்தில் பயங்கரக்காடாக — புதரும் புல்லும் கல்லும் பாறைகளும் மூடிக்கிடந்த மலையகம் இன்று எழில் கொஞ்சும் பகுதியாக—அந்நிய செலாவணியை அள்ளித் தரும் காமதேனுவாக—விளங்கி வருகின்றதென்றால்...

அதற்கு காரணஸ்தர்கள் யார்?

15 இலட்சம் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்கள்!

இந்த மண்ணுக்காக பல தலைமுறைகளாக உழைத்து உழைத்து உக்கிப் போனவர்கள் அவர்கள்!

அவர்களது உடல்கள் இந்த மண்ணுக்கு எருவாகப் பயன்பட்டுவருகின்றன!

அவர்களது இரத்தம், இந்த மண்ணுடன் இரண்டறக் கலந்துவிட்டது.

அவர்களது மேனியிலிருந்து சிந்தும் வியர்வைத் துளிகள்தான் இந்நாட்டை இன்று வாழவைத்துக்கொண்டிருக்கின்றன.

அப்படிப்பட்ட அந்த தியாகச் செல்வங்களின்—உழைக்கும் கரங்களின்—நிலையென்ன?

வேதனை!

கண்ணீர்!

சோதனை!

துன்பம்!!

இவற்றால் தாக்கப்பட்டு செய்வதறியாது திகைத்து நிற்கிறார்கள் அந்த ஏழைப் பாட்டாளிகள்!

நாட்டுக்காக உழைத்த — உழைத்துவரும் — அந்த மக்களுக்கு சோசலிச ஆட்சி நடப்பதாக கூறப்படும் இந்த இந்நாட்டில் இன்று மனித அடிப்படை உரிமைகள் எதுவுமே இல்லை!

இந்நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்ததாக கூறப்பட்ட போது — மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் அனைவருக்கும் ஏனைய பிரஜைகளைப் போல பூரண குடி உரிமை இருக்கத்தான் செய்தது!

ஆனால் வெள்ளைக்கார ஆட்சி ஒழிந்து சிங்கள ஆட்சி வந்ததும்— கொடூரமான பிரஜாவுரிமைச் சட்டங்களால் அந்த மக்களின் குடியுரிமை பறிக்கப்பட்டது.

இதற்கு ஒரே காரணம்—அவர்கள் அனைவரும் தமிழர்கள் என்பதுதான்! தமிழர்களின் அரசியல் பலத்தை வெட்டிச் சாய்த்திடவே இந்தச் சதித்திட்டம் தீட்டப்பட்டது.

சுதந்திரம் வந்ததாக கூறப்பட்டு, 26 வருடங்கள் முடிந்துவிட்டன. இந்த 26 வருடங்களாக, இந்த 15 இலட்சம் மக்களும், ஆடுமாடுகள்போல்—பொட்டுப் பூச்சிகள் போல் ஒதுக்கப்பட்டு புறக்கணிக்கப்பட்டுவருகின்றனர்.

இந்த மக்களுக்கு—

குடியுரிமை இல்லை—

வாக்குரிமை இல்லை—

தொழிலுரிமை இல்லை—

கல்விவுரிமை இல்லை—

குறிப்பாகச் சொல்லப்போனால்— இந்நாட்டுப் பிரஜையென்று கூறப்படுபவர் ஒருவர் அனுபவிக்கின்ற சலுகைகள், உரிமைகள் அனைத்தும் இந்த மக்களுக்கு மறுக்கப்பட்டு வருகிறது.

இலங்கைப் பிரஜையாகப் பதிவுசெய்யப்பட்டவர்களும், இலங்கைப் பிரஜாவுரிமைக்கு தகுதியுடையோரும் பாரபட்சங்களுக்கும் துன்பங்களுக்கும் ஆளாக்கப்படுகிறார்கள்.

மலையகத்தில், பல தோட்டங்களில் பல தலைமுறைகளாக வேலைசெய்துவந்த தோட்டத்தொழிலாளர்கள், அத்தோட்டங்களை அரசு பொறுப்பேற்ற பின்னர் இன்று வேலையின்றி விரட்டப்படுகிறார்கள். இந்த ஏழை தமிழ் மக்கள், வடக்கு, கிழக்கு மாகாணங்களிலாவது வந்து குடியேறி காட்டை வெட்டி பயிர்த்தொழிலில் ஈடுபட்டால், அங்கிருந்தும் இவர்களை விரட்ட முயற்சிக்கிறது இலங்கை அரசு!

பல நெருக்கடிகளை கொடுத்து—பல துன்பங்களைத் தந்து — இந்நாட்டையே தமது தாயகமாகக் கொண்டு வாழ விரும்பும் — வாழ முடிவுசெய்துவிட்ட—மலையகத் தமிழர்களை இங்கிருந்து துரத்திவிடவே இக்கொடுமைகளில் ஈடுபட்டுள்ளது இலங்கை அரசு.

இவ்வாரம் ஈழம் வரும் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியார், மனிதாபிமானம், மனித அடிப்படை உரிமை — ஜனநாயக முறை—போன்றவற்றின் அடிப்படையில் மலைநாட்டுத்தமிழர் பிரச்சினையை அணுகவேண்டுமென்றும், குறுகிய இனவெறிப் போக்கை கைவிடும்படியும் இலங்கை அரசுக்குப் புத்திபுகட்டுவார் என்று தமிழ் மக்கள் அனைவருமே எதிர்பார்க்கிறார்கள்! வங்க மக்களின் கண்ணீரைத் துடைத்த அதே கை தமிழன் கண்ணீரையும் துடைக்கும் என்று தமிழ் மக்கள் நம்புகிறார்கள்.

மலையகத்தமிழன் எல்லாத் துன்பங்களையும் தாங்கிக்கொண்டு இன்னும் அமைதியாகத்தான் இருக்கிறான் — நீதி கிடைக்கும் என்றுதான் இன்னும் நம்புகிறான்.

ஆனால்—என்றோ ஒரு நாள் அவனது பொறுமை வெடிக்கத்தான் செய்யும்! பூகம்பம் தோன்றத்தான் செய்யும்!!

அப்போது தங்கள் இனவெறி கொள்கையின் முடிவை சிங்கள ஏகாதிபத்தியம் கண்டுகொள்வதும் தவிர்க்கமுடியாததாகிவிடும்!

## ‘வங்கம்’ தோன்றிய கதையை இந்திரா இங்கு எடுத்துக் கூறட்டும்! சிங்களவெறியர்கள் முடிந்தால் திருந்தட்டும்

ஜனநாயகமனிதஅடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்ட இனம் அதனை அடைய முயற்சித்த போது, அடக்குமுறையும், அராஜகமும் கட்டவிழ்த்துவிடப்பட்டது. அதன் பெறுபேறாக கிழக்கு வங்காளத்தில் இன ஒழிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. கவிஞர்கள், எழுத்தாளர்கள், அறிஞர்கள், விஞ்ஞானிகள், மேதைகள் அரசியல் படுகொலை செய்யப்பட்டனர். அரசியல் தலைவர்கள் சிறைப்பிடிக்கப்பட்டனர். ஆயிரக்கணக்கான இளம் கன்னியர் கற்பழிக்கப்பட்டனர். சொந்த நாடு சூறையாடப்பட்ட நேரத்தில் இலட்சக்கணக்கான மக்கள் நாடு கடந்து அயல் நாட்டில் அகதிகளாகத் தஞ்சமடைந்தனர்.

அகில உலகமும் மேற்படி அட்டூழியம் நடைபெற்ற நேரத்தில், மனித உரிமைக்காகப் போராடிய மக்கள் இன ஒழிப்புக்குள்ளாவதைப் பார்த்தும் பாராதுபோல் நீண்ட நெடுந் துயில் கொண்டிருந்தது. கட்டத்தட்ட ஓராண்டு கால அநீதியும் அதர்மமும் தலையெடுப்பது போன்று போக்குக்காட்டிய நேரத்தில், அடக்கப்பட்டு ஒடுக்கப்பட்டு இன ஒழிப்புக்கு உள்ளாகி வந்த மக்களுக்கு அபயம் அளித்து இரட்சிக்க அன்னைமகா சக்தியாக ஒரு வீராங்கனை கிளர்ந்து எழுந்தாள்.

திருமதி இந்திராகாந்தி மட்டும் உலக யுத்தமே வருவதானாலும் அதனை எதிர்நோக்கும் அசாத்திய துணிச்சலுடன் இந்தியாவின் துருப்புக்களை அங்கு அனுப்பியிருக்காவிட்டால் கிழக்கு பாக்கிஸ்தான் அழிந்திருக்கும். வங்காள மொழி பேசும் இஸ்லாமியர் பூண்டோடு இன ஒழிப்புக்கு உள்ளாகியிருப்பர்.

உலகப் படத்தில் புதிய வங்களா தேசம் இடம் பெறக் காரணகர்த்தா இந்திராவே.

இலங்கையின் புதிய அரசமைப்புத் திட்டம் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களுக்கு ஐக்கிய நாடுகள் சாசனத்தில் உரைக்கப்பட்டுள்ளபடி ஜனநாயக மனித அடிப்படை உரிமைகளை வழங்க மறுத்து அவர்களை இரண்டாந்தரப் பிரஜைகளாக்கியுள்ளது. மீட்டுப்பெறுவதே தமிழர் கூட்டணியின் இலட்சியம். அதே உரிமைகள் மறுக்கப்பட்டதன் எதிர் விளைவுகளே புதிய வங்களா தேசத்தின் தோற்றம். அப்பிரச்சினையில் இந்தியர் தலையிட நேர்ந்த காரணத்தை திருமதி இந்திராகாந்தி இலங்கை அரசுக்குணர்த்த இந்திராவின் இலங்கை வருகை உதவுமா. இலங்கை அரசின் நட்பு நாடு என்ற வகையில் அதனை உணர்த்த வேண்டியது இந்திராவின் கடமை.

இன வேறுபாடு இன ஒழிப்புக்கொள்கைகள் உள்நாட்டு விடயங்கள் அல்ல. றோடீசியா, தென் ஆபிரிக்க விஷயத்தில் உலக நாடுகளின் மனப் போக்கு எப்படியுள்ளது என்பதை அறிவோம்; இங்கும் அது பொருந்தும்.

வங்காள தேசத்தில் போன்று பிரச்சினைகளை வளர்த்து முற்றவிடாது சமரசத் தீர்வுகள் காணப்பட திருமதி இந்திராகாந்தியின் வருகை பயன்படுமாக. தமிழ்ப் பேசும் மக்கள் சந்தேகப் பிரஜைகள் என்ற நிலை மாறுமாக.

## தமிழ் மாணவர்களுக்கு ஏன் இந்த பாரபட்சம்?

கைது செய்யப்பட்ட சில தமிழ் மாணவர்கள் தமது பரீட்சைகளை எடுப்பதற்கு பிரவேசச்சிட்டுக்கள் வழங்கப்பட்டும் பொலிஸ் அதிகாரிகள் அனுமதிவழங்க மறுப்பதை தமிழர் கூட்டணி வன்மையாகக் கண்டித்துள்ளது. முன்பு தடுப்புக்காவலில் வைக்கப்பட்ட பயங்கரவாதிகள் என்று கூறப்பட்ட சிங்கள மாணவர்களுக்கு பரீட்சைகள் எடுப்பதற்கு அனுமதி அளித்தது போல் குறித்த தமிழ் மாணவர்களுக்கும் தமது பரீட்சைகளை எடுப்பதற்கு வேண்டிய வசதிகளை அளிக்குமாறு அரசாங்கத்தை தமிழர் கூட்டணி கேட்டுள்ளது.

## பாரபட்சம், கெடுபிடி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டத்துக்கு உடந்தையாக இருக்க வேண்டாமென்றும் தமிழர் கூட்டணி இந்தியப் பிரதமரிடம் கேட்டுள்ளது.

இலங்கைப் பதிவுப் பிரசைகளான இந்திய வம்சாவளியினருக்கு தொழில், காணி அபிவிருத்தி, குடியேற்றம் ஆகியவற்றிலும், பிரசைகளுக்குரிய ஏனைய உரிமைகள் சலுகைகள் அளிப்பதிலும் எவ்வித பாரபட்சமும் இடம் பெறாது பார்த்துக் கொள்ளுமாறும் கூட்டணி இந்திய அரசிடம் கேட்டுள்ளது

12-4-73ல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழர் கூட்டணி நடவடிக்கைக் குழுவில் எடுக்கப்பட்ட குறிப்பிட்ட தீர்மானம் வருமாறு:—

இலங்கை அரசாங்கம் பழிவாங்கும் நோக்கத்தோடு தோட்டங்களை சுவீகரிக்கும் கொள்கையை மலைநாட்டுப் பகுதிகளில் கடைப்பிடித்து, அத்தோட்டங்களில் வேலை செய்யும் இலங்கைப் பிரசைகளாக அல்லது இலங்கைப் பிரசா உரிமைக்கு தகுதி உள்ளவர்களான இந்திய வம்சாவளி மக்களை அத்தோட்டங்களில் இருந்து அகற்றும் ஆயுதமாக இக்கொள்கையை உபயோகிப்பதாலும்,—

இம்மக்களுக்கு மாற்றுத் தொழிலும், வசிப்பிடமும் அளிக்கவேண்டிய தனது கடமையைச் செய்வதற்குப் பதிலாக இலங்கை அரசாங்கம் அவர்கள் தமது ஜீவனோபாயத்திற்கு ஒரே வழியாக திருத்திப் பயிரிட்ட வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள தரிசு நிலங்களில் இருந்து அவர்களைப் பலாத் [illegible] பாரபட்ச நடவடிக்கையை கையாண்டு வருவதாலும்,—

இதே முறையில் பயிரிட்ட சிங்கள மக்களுக்கு எதிராக எவ்வித நடவடிக்கை எதுவும் எடுக்காது அரசாங்கம் அவர்களை ஊக்கப்படுத்தி வருவதாலும்,—

இந்திய வம்சாவளி மக்கள் மத்தியில் ப[illegible]தையும் பீதியையும் ஏற்படுத்தியும் அவர்களை தொழில் வசதியற்றவர்களாகச் செய்தும் அவர்களை இந்தியப் பிரசைகளாக தம்மைப் பதிவு செய்து நாடுகடத்தப்படுவதை ஏற்றுக்கொள்ள கட்டாயப்படுத்தும் பகிரங்கமாக நடவடிக்கை எடுக்கும் இலங்கை அரசாங்கத்தின் இச்செயலை தமிழர்கூட்டணி வன்மையாகக் கண்டிக்கின்றது.

இந்தியப் பிரசைகளாகப் பதிவு செய்வதற்கு விண்ணப்பம் செய்யும் இடாப்புகளை மீண்டும் திறப்பதன் மூலம் இலங்கை அரசாங்கத்தின் இந்தப் பாரபட்ச நடவடிக்கைக்கு உடந்தையாக இருக்க வேண்டாம் என்று இந்திய அரசாங்கத்தை தமிழர் கூட்டணி வேண்டுவதோடு இலங்கைப் பதிவுப் பிரசைகளான இந்திய வம்சாவளியினருக்கு தொழில், காணி அபிவிருத்தி, குடியேற்றம் ஆகியவற்றிலும் பிரசைகளுக்குரிய ஏனைய உரிமைகள் சலுகைகளை அனுபவிப்பதிலும் எவ்வித பாரபட்சமும் இடம்பெறாது பார்த்துக்கொள்ளுமாறும் இந்திய அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகின்றது.

தீர்மானத்தைப் பிரேரித்தவர் திரு வி. தர்மலிங்கம். அனுமதித்தவர் திரு. அ. அமிர்தலிங்கம்.

## “நானே ராஜா தினபதி ராஜா”

எல்லாவிடயத்திலும் நான்தான் முந்திக்கொள்கிறேன். எனக்கு இங்கு நிகர் யார்? என்றவழமையானபாணியில் பல்லவி பாடுகிறார் தினபதி ராஜா.

நன்னாள் பிரதமர் டட்லி சேனநாயக்கா அவர்கள் இறந்த செய்தியை ஏனைய தினசரிகள் பிரசுரிக்க பின்வாங்கி இருந்ததாம். ஆனால் வாசகர்களுக்கு சுடச்சுட அறிய வைத்தது சிந்தாமணி தான் என 1973—4—16ம் திகதி தினபதியின் முகப்பில், அன்றைய சிந்தாமணியின் பகுதியை பிரசுரித்து தன்னையே அள்ளிவைத்து எழுதியிருந்தது தினபதி.

உலகமே சோகமயமாக இருந்த சந்தர்ப்பத்தில் தனது புழுகுத் தனத்தை அன்றைய பத்திரிகையில் பிரசுரிப்பது மிக தவறு என்பதை இது உணரவில்லை போலும், வழமையாக புளுகுவதும், தம்பட்டம் அடிப்பதே இதன் தொழில் ஆனால் அந்த இணையில்லா தலைவன் இறந்த நாளிலாவது சிறிது அமைதியாக இருந்திருக்கலாம் அல்லவா? அந்த சோக நாளில் கூடவா தனது வழமையான பல்லவியை பாடுவது.

நல்லவேளை ஹரிச்சந்திர மகாராஜன் இந்த நூற்றாண்டில் இல்லாமல் இருப்பது. அவர் இருந்திருந்தால் இந்த நானே ராஜா, புளுகினி ராஜா, தினபதி ராஜாவுக்கு மரண தண்டனை வழங்கி இருப்பார்.

எம். எம் தாஸ் – திருமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாழ்வு நிலை நீங்கித் தமிழன் தலையெடுத்திட 'மே' நாள் வழி காட்டுமா?

## மேநாள்-சிறப்புக் கட்டுரை

சிற்றூரும் வரம்பெடுத்த
வயலும் ஆறும்
தேக்கியநல் வாய்க்காலும்
வகைப் படுத்தி
நெற்சேர உழுதுழுது
பயன் விளைக்கும்
நிறையுழைப்புத் தோள்களெலாம்
எவரின் தோள்கள்?
கற்பிளந்து மலைபிளந்து
கனிகள் வெட்டிக்
கருவியெலாம் செய்து தந்த
கைதான் யார்கை?
பொற்றுகளை கடல்முத்தை
மணிக் குலத்தைப்
போய்எடுக்க அடக்கியமூச்
செவரின் மூச்சு.

என்று கேள்விகளை அடுத்தடுத்துக் கேட்டு இவை அனைத்தையும் செய்பவன் தொழிலாளி என்று தொழிலாளியின் பெருமையைப் பெருமித உணர்ச்சியோடு பாடுகிறார் பாவேந்தன் பாரதிதாசன்.

### "மே" நாளின் பிறப்பிடம்

இப்பெருமைமிக்க தொழிலாளியின் பெருநாள் — திருநாள் — தியாக நாட்தான் "மே" நாள். தொழிலாளருடன் நெருங்கிய தொடர்புடைய "மே" நாளை எண்ணும் போது பலருக்கு உருசியா, சீனு முதலிய பொதுவுடமை நாடுகளின் எண்ணம் தலைதூக்குவதும் இயல்பு. காரணம், பொதுவுடமை நாடுகளில்தான் தொழிலாளர் வாழ்வின் தொல்லைகள் அனைத்தும் தொலைந்து நல்லவை எல்லாம் அடைந்துள்ளனர் என்ற நம்பிக்கை பலரிடை நிலவுகிறது. இதனுல்தான் மே நாட் புரட்சி கூட உருசியாவிற்தான் தோன்றியது, என்று எண்ணுவோர் பலர் உளர். ஆனுல் எப்படி உருசியாவில் தோன்றிய பொதுவுடமை ஆட்சிக்கு வித்திட்ட பெருமான் கால்மாக்ஸ், இங்கிலாந்தில் வாழ்ந்த ஜேர்மன் நாட்டு யூதனுக விளங்கினுனே அதுபோன்றே இம் "மே" நாட் புரட்சியும் மலர்ந்தது பொதுவுடமை நாடாகிய உருசியாவில் அல்ல; ஆனுல் முதலாளித்துவ நாடு எனக் கண்டிக்கப்படும் அமெரிக்காவில்தான் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

### "மே" நாள் தோற்றத்தின் பின்னணி

"மே" நாளின் தோற்றத்தை வரலாற்றுக் கண்கொண்டு நாம் நோக்க விரும்பின் 1827-ம் ஆண்டுக்கு அன்றிருந்த அமெரிக்காவிற்கு இக்கட்டுரையை நுகர்வோரை அழைத்துச் செல்லுதல் தவிர்க்க முடியாது. அமெரிக்காவில் உள்ள பிலடெல்லியா (philadelphia) என்ற நகரில் தான் 10 மணி நேரவேலை என்ற குரல் தொழிலாளர் நிறுவன அடிப்படையில் முதன் முதல் 1827-ல் எழுந்தது. இவ்வியக்கம் காலப்போக்கில் அமெரிக்காவின் ஏனைய நகரங்களுக்கும் பரவியது. 1837-ல் அமெரிக்கா மக்கள் தலைவனுல் அரசாங்கத்தில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு 10 மணி நேர வேலை மட்டும்தான் என்ற சட்டம் நிறைவேற்றப்பட்டது.

### "மே" நாள் மலர்ந்தது.

இத் தொழிலாளர் இயக்கம் 1886—ல் அமெரிக்காவின் சிக்காகோ நகரில் 'மே' முதலில் மாபெரும் இயக்கமாக உருவெடுத்து எட்டு மணித்தியாலம் வேலை, எட்டு மணித்தியாலம் ஓய்வு, எட்டு மணித்தியாலம் உறக்கம்' என்று முழக்கம் இட்டது. இத் தொழிலாளர் இயக்கத்தைக் கண்டு அஞ்சிய முதலாளிகள் எப்படியும் இதனை முறியடிக்க வேண்டும் என்று எண்ணி காவலரைத் (பொலிசாரைத்) தூண்டி தொழிலாளர் மீது கடும் நடவடிக்கை எடுத்தனர். அது மட்டுமல்ல தொழிலாளர் வன்முறையில் இறங்கியுள்ளனர் என்ற குற்றத்தினை சுமத்தி காவலரை ஏவி நான்கு தொழிலாளர்களைச் சுட்டுக்கொன்றனர். 'கொடுமையிலே நசுக்குண்ட மக்கள் நெஞ்சம் கொந்தளிக்கமேன் மேலும் கொடுமை மீற விடுபடுவோம், இன்றேல் நாம் வீழ்வோம் என்று மீள வெறி கொண்டெழுதல் புரட்சி" என்பதிற்கமைய கிளர்ந்தெழுந்த தொழிலாளர் கிளர்ச்சி அமெரிக்காவையே ஆட்டம் காணும்படி செய்தது. தொழிலாளர்கள் தம் ஆற்றலை உணர்ந்து புதிய உணர்ச்சி பெற்றனர்.

### எழுச்சி நாளாக உருவெடுத்தது

இதன் விளைவு 1888ல் நடைபெற்ற அமெரிக்க தொழிலாளர்கள் சங்கங்களின் மாநாட்டில் தொழிலாளர்களின் ஒற்றுமையை நிலை நாட்ட கோரிக்கைகளுக்கு வலுவூட்ட "மே" முதல் நாளை தொழிலாளர்களின் எழுச்சி நாளாகக் கொண்டாடுவது என்று தீர்மானிக்கப்பட்டது.

### மேதினி எங்கும் பரவிய "மே" நாள்

இதையடுத்து 1889ல் பாரிசில் கூடிய பிரெஞ்சுத் தொழிலாளர்கள் "மே" நாளை அனைத்துலக அடிப்படையில் தொழிலாளர்களின் வெற்றிவிழாவாகக் கொண்டாட வேண்டும், என்று தீர்மானித்தனர். இத்தீர்மானத்திற்கமைய 1890 இல் அகில உலக அடிப்படையில் "மே" நாள் மேதினி எங்கும் கொண்டாடப்பட்டது தொழிலாளர் வகுப்பின் ஒப்பற்ற வழி காட்டியாய் விளங்கிய பிரெடரிக் எங்கெல்ஸ் அவர்கள் இத் தொழிலாளர்களின் எழுச்சியை பின்வரும் முறையில் உணர்ச்சியோடு தன் எழுத்தில் உருவம் கொடுத்துள்ளார். "இன்று இந்தச் சொற்ளெடர்களை நான் எழுதும் போது ஐரோப்பிய அமெரிக்க தொழிலாள வகுப்பு அதன் போராட்ட ஆற்றலை முதல் தடவையாக ஒன்றுதிரட்டி ஒருகொடியின் கீழ் நின்று ஒரு உடனடிக் கோரிக்கையான எட்டுமணி நேர வேலைக்காக ஒரு வலிவு மிக்க தேர்வினை நடாத்துகின்றது; இன்று இக் காட்சியைக் காணும்போது எல்லா நாடுகளிலுமுள்ள உழைக்கும் மக்கள் உண்மையிலேயே ஒன்று திரண்டு விட்டார்கள் என்ற உண்மை எல்லா நாடுகளிலுமுள்ள முதலாளிகளின், நிலவுடமையாளரின் கண்களைத் திறக்கும்.' இப்படித் தொழிலாளரின் எழுச்சியை விழிப்புணர்ச்சியை எங்கெல்ஸ் வளமான நடையில் வருணித்தும் முதலாளிகளும் நிலவுடமையாளரும் எப்படியும் தொழிலாளர்களையும் அடக்கி ஒடுக்கலாம் என்று கற்பனை செய்தனர். ஆனுல் அவர்கள் கண்டதோ மாபெரும் தோல்வி. தொழிலாளர் அடைந்ததோ மாபெரும் வெற்றி.

### ஆசிய ஆபிரிக்க நாடுகளையும் அணைத்த விழா

1917-ல் உருசியாவில் ஏற்பட்ட ஒப்புரவு [சோசலிச] புரட்சி 'மே' நாளை நாட்டின் விடுமுறையாக உருவாக்க வழிவகுத்தது. இரண்டாம் உலகப்போரை

**ஈழவேந்தன்**

அடுத்து 1945-ல் ஒப்புரவுக் கோட்பாட்டைத் [சோசலிச இலட்சியத்தை] தழுவிய சில ஐரோப்பிய நாடுகளும் 'மே' நாளுக்கு மேன்மை கொடுத்துக் கொண்டாடின 1949-ல் வல்லரசுகளின் வலிய பிடியிலிருந்து தன்னை விடுவித்த மக்கட் சீனுவும் மற்றும் ஏறக்குறைய மேற்குறித்த ஆண்டை ஒட்டி விடுதலை பெற்ற ஆசிய ஆபிரிக்கா இலத்தின் அமெரிக்கா போன்ற நாடுகளும் 'மே' நாளை மேன்மை மிகு நாளாகக் கொண்டாடின.

### 'மே' நாளும் தமிழரும்

"சமய முளபடிக் கெல்லாம் பொய் கூறி அறங் கொன்ற சுமடர்கள் கோர்த்துவைத்த சாத்திரப் பொய்மைகள் அனைத்தையும் பொசுக்கியே தீருவோம் என்று அறை கூவல் விடுத்து 'உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்" என்று அழைப்பு விடும் நாளாக விளங்கும் 'மே' நாள் தமிழருக்கு என்ன உண்மையை எடுத்துக்காட்டுகிறதென்பது இங்கு சிந்தித்தற்குரியது. ஆங்கிலச்சொற்பெருக்கத்திற்கு துணை நிற்கும் ஒரு சொல் 'கூலி' என்ற தமிழ்ச் சொல்லாகும். கூலி என்ற தமிழ்ச்சொல் தமிழருக்கு பெருமையையோ இழிவையோ தருகிறதென்பது தனியாராய்ச்சி. ஆனுல் தமிழர் எவரையும் சுரண்டி வாழும் முதலாளிகள் அல்ல, ஆனுல் உழைத்து வாழும் உழைப்பாளிகள் என்பதை இக் 'கூலி' என்ற சொல் வலியுறுத்துகிறதென்பதை எவரும் மறுக்க முடியாது. அது மட்டுமல்ல கிரியர்சன் என்ற ஆராய்ச்சியாளர் 'தமிழர் என்றுல் உழைப்பாளிகள்' என்று பொருள் விளக்கம் தந்திருப்பது உழைத்து வாழும் இனம் தமிழ் இனம் என்பதை உலகிற்கு உணர்த்துகிறதன்றே?

### தமிழர் இலக்கியம் இயம்பும் சமத்துவம்

இவை ஒரு புறம் இருக்க இலக்கியக் கண்கொண்டு நோக்குகையில் கூட 'ஒப்பரவு' என்ற சொல்லினுல் சமத்துவத்தை வலியுறுத்தி 'இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக உலகியற்றியான்' என்று இயம்பி 'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாந் தலை' என்று பகர்ந்த வள்ளுவர் தொட்டு 'கொள்வார் இல்லாததினுல் கொடுப்பாரும் இலர்' என்ற சமுதாய சமத்துவத்தைக் கனவு கண்ட கம்பன் ஊடாக 'தனியொருவனுக்கு உணவில்லையெனின் செகத்தினை அழித்திடுவோம்.' என்று போர்க்குரல் எழுப்பிய பாரதிவரை— இல்லை மன்னிக்கவும் 'கொலைவாளினை எடடா மிகு கொடியோர் செயல் அறவே' எனக் கிளர்ந்தெழும் பாரதிதாசன் வரை — ஒப்புரவியில் மூழ்கித் திளைத்த இனமாகவே தமிழ் இனம் விளங்கி வருவதை எவரும் மறுக்க முடியாது.

### தமிழரின் தொழிற்சங்கப் பணி

இலங்கை இந்திய தொழிற்சங்க இயக்க வரலாற்றைக்கூட நடுநிலை நின்று ஆராய்கின்றபோது அங்கும் தமிழரின் பங்கு— பணிதலை தூக்கி நிற்பதைக் காணக்கூடியதாயிருக்கிறது. தொழிற்சங்க இயக்கத்தை 1918 ஏப்பிரல 27ல் இந்தியாவிலேயே முதன் முதல் தொடக்கி திறம்பட நடாத்திய திரு. வி. க. அவர்களையும் திரு. கேசவப்பிள்ளையையும், திரு. செல்வபதிச் செட்டியாரையும், இராமானு சுலுநாயுடுவையும், வ. உ. சியையும் யாம் மறக்க நினைத்தாலும் மறக்க முடியாது. அது போன்றே ஈழத்து தொழிற் சங்க வரலாற்றில் தனிவிடம் பெற்று 'தொழிற்சங்க இயக்கத்தின் தந்தை' என்ற பொதுவுடைமைத் தலைவர் பீற்றர் கெனமனுல் வழுத்தி வாழ்த்தப்படும் சேர். பொன். அருணுசலம் தொட்டு, உயிர் கொடுத்த கந்தசாமி ஈருக தொழிற்சங்க வளர்ச்சிக்கு தம்மை அர்ப்பணித்தவர்கள் தமிழர் என்பதை வரலாறு நினைவூட்டிய படியே இருக்கின்றது.

### தன் நிலை மறந்த தமிழன்

இப்படியெல்லாம் தொழிலாள வர்க்கத்தோடு தொழிற்சங்க இயக்கத்தோடு பின்னிப் பிணைந்து தன்னை அர்ப்பணித்த தமிழ் இனத்தின் இன்றைய நிலை என்ன? மேதினி எங்கும் 'மே' நாள் விழா கொண்டாடப்படுகின்றது. உலகம் தழுவும் தமிழ்த்தொழிலாளியும் தன் நிலை மறந்து தனது இனத்திற்கு — தனது மொழிக்கு—தனது தாயகத்திற்கு — தனது குடியுரிமைக்கு வாக்குரிமைக்கு ஏற்பட்டிருக்கும் பெரும் பேரினவலைப் பற்றி மருந்தளவும் கவலை கொள்ளாது நெஞ்சில் நோவெடுக்க கூட்டத்தில் கோவிந்தா என்ற முறையில் சிந்தனையற்ற மந்தைகள் நிலையில் 'அப்பிட்ட எப்பாய் பாஷா தெக்காய்' என்று சக சிங்களத்தொழிலாளி எழுப்பும் குரலின் பொருள் புரியாது பக்கபலமாக அதே ஒலியை எழுப்பும் படித்த — படியாத தமிழ்த்தொழிலாளியைக் காணும் போது எம் கண்ணீர் செந்நீராக மாறுகிறது. 'உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்' என்று சிங்களத்தொழிலாளி குரல் எழுப்பும் போது தன் இனத்தை, தன் மொழியை தன் நாட்டை மறக்கவில்லை. மாருக அவ்வுணர்ச்சிகள் அவனிடத்தில் தலை தூக்கி நிற்கின்றன. ஆனுல் தமிழ்த் தொழிலாளி இதற்கு விதிவிலக்கு. இந் நிலையை மாறினுல் அன்றி தமிழனுக்கோ தமிழ்த்தொழிலாளிக்கோ வாழ்வில்லை என்பதை யாம் மறவாதிருத்தல் கடமை.

### இன எழுச்சி பெறுவோம்

உண்மையில் "மே" நாள் ஒரு வகுப்பினரை ஒரு வகுப்பினர் அடக்கி ஒடுக்குவதை எதிர்க்கும் நாள் மட்டுமல்ல ஒரு சாதியினரை மற்றொரு சாதியினர் ஏமாற்றி ஏற்றம் பெற முனைவதை சாடுவதோடு ஒரு இனத்தவரை மற்றைய இனத்தவர் அடக்கி ஆள்வதை எதிர்க்கும் நாளாகவும் "மே" நாள் விளங்க வேண்டும்.

### தாழ்ந்த தமிழ் இனம் தலையெடுக்க

ஈழத்தில் உள்ள இடதுசாரி இயக்கத் தலைவர்கள் சிங்கள இன உணர்வை ஏன் சிங்கள இனவெறியை தமது தேவைக்கு ஏற்ற முறையில் வளர்த்துப் பயன் படுத்திக் கொண்டு தமிழ் தொழிலாளிகளுக்கு குறுகிய நோக்கம் கூடாது என்று புத்திமதி புகட்ட "மே" நாள் அன்று வடக்கு, கிழக்கு, மலை நாட்டை நோக்கி படையெடுப்பது உறுதி. அப்பொழுதெல்லாம் நெஞ்சுறுதி படைத்த தமிழ்த் தொழிலாளத் தோழர்களே! இத் தலைவர்களைப் பார்த்து 'ஆங்கிலேய ஆட்சி அகன்றது உண்மை, ஆனுல் அதே இடத்தில் 'தேசியம்' என்ற போர்வையில் இன்று நிலை நாட்டப்பட்டிருப்பது சிங்கள ஆதிக்கமும் வடித்தெடுத்த வகுப்புவாதமும், இதை முறியடிப்பது எமது முதற் கடமை', என்று முழங்

(6-ம் பக்கம் பார்க்க)

## புத்தூர் பாடசாலைக்கு பெற்றூர்கள் பெரும் ஆதரவு!

புத்தூரில் தமிழர் கூட்டணியினுல் சட்டமறுப்பாக ஆரம்பிக்கப்பட்டுள்ள திருமுருகன் இந்து தமிழ் பாடசாலைக்கு பெற்ருர்களின் ஆதரவு பெருகிவருகிறது. இப்பாடசாலையில் பிள்ளைகளின் தொகை 63 ஆக உயர்ந்துள்ளது. முதலாம் வகுப்பில் தற்போது 36 பிள்ளைகளும் பாலர் வகுப்பில் 27 பிள்ளைகளும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கோடை விடுமுறைக்காக தற்போது மூடப்பட்டுள்ள இப்பாடசாலை மீண்டும் மே முதல் வாரம் இயங்க ஆரம்பிக்கும். பாடசாலையின் மேற்பார்வையாளராக திரு ச. ஞானமூர்த்தி பொறுப்பேற்றுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேமதுரத் தமிழோசை

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்" என்ற பாரதியின் வாக்குக்கிணங்க, இன்று லண்டன் பீ. பீ. ஸியிலிருந்து, தமிழோசை தமிழ்கூறும் நல்லுலகை நாடி ஓடி வருகின்றது.

பீ. பீ. ஸியிலிருந்துதமிழோசை நிகழ்ச்சியினை திரு. வி. ஆர். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தயாரித்தளிக்கிறார். இவருடன் திரு. சீதாராம் கிருஷ்ணமூர்த்தி, திரு. ரா. தியாகராஜன், திருமதி ஆனந்தி சூர்யப்பிரகாசம், திருமதி சாரதா நம்பியாரூரான் ஆகியோர் கலந்து சிறப்பித்து வருகிறார்கள். பாரதியின் வாக்கை நினைவுகூர்ந்து தேமதுரத் தமிழை உலகமெலாம் பரப்ப வேண்டும் என்பதையே மூல மூச்சாகக் கொண்டு பணியாற்றிவருகிறார்கள் தமிழோசைக்குழுவினர். இவர்களுக்கு தமிழ் மக்கள் அனைவரும் தமது முழு ஆதரவையும் அளிக்க வேண்டும் என்பதே என் அவாவாகும்.

வாரம் மூன்று நாட்கள்—ஞாயிறு, திங்கள், வியாழன் ஆகிய நாட்களில் தமிழ் நிகழ்ச்சிகளைத் தமிழோசைமூலம் ஒலிபரப்பிவருகிறார்கள். இலங்கை நேரத்தின்படி பிற்பகல் 3 மணி முதல் 3.30 வரையும் மீண்டும் இதன் மறு ஒலிபரப்பை இரவு 9.45முதல் 10.15 வரை இற்றை 31, 41, 49 மீட்டர் அலைவரிசைகளில் தமிழோசை ஒலிபரப்பாகிவருகிறது.

தமிழோசை நிகழ்ச்சிகளில் செய்தியரங்கம், செய்திசுருக்கம் பத்திரிகை விமர்சனம், கண்ணோட்டம், விவசாயம், விஞ்ஞானம், மருத்துவம், சமூகச் செய்திகள், பேட்டிகள் உரையாடல், இலக்கியப்பகுதி, கலை நூல் விமர்சனங்கள் என்பன முக்கிய அம்சங்களாக இடம் பெறுகின்றன. இவற்றிற்கு எவரும் எந்த விதமான ஆக்கங்களையும் அனுப்பி வைக்கலாம். அல்லது நிகழ்ச்சிகள் பற்றிய குறை நிறைகளை எழுதி அனுப்பலாம். தமிழோசை நேயர்களின் தரமான ஆக்கங்களுக்கு முக்கிய இடமளித்துவருகிறார்கள் தமிழோசைக் குழுவினர். உங்கள் ஆக்கங்களை அனுப்ப வேண்டிய முகவரி:—

தமிழோசை
த. பெ. இல; 654
கொழும்பு; அல்லது
B. B. C
P. O. Box 76
Bush House
Strand
London wc 234 P. H.

நீங்களும் கேளுங்கள் கேட்டுப் பிறருக்கும் சொல்லுங்கள், பல பயனுள்ள தரமான நிகழ்ச்சிகளை ஒலிபரப்பிவரும் தமிழோசைக் குழுவினருக்கு ஈழம் வாழ் தமிழ் மக்களின் சார்பாக எமது நல் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்வோமாக.

தகவல்:—

செல்வி வசந்தகௌரி கனகரத்தினம்,

கொழும்பு—12.

# தமிழ்மொழி ஈழத்தில் சிதைக்கப்படும் விதம் காணீர்!

தமிழ்மொழி பழமையானது. அது மாத்திரமல்ல மிகவும் இனிமையானது. அழகானது என்பது மொழி வல்லுனர்களாலே ஒப்புக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். அப்படிப்பட்ட தமிழ்மொழி மிகவும் திருத்தமாக, முறையாக பேசப்பட்டும் எழுதப்பட்டும் வருவது நாம்வாழும் இந்த ஈழத்திரு நாட்டில் தான் என்பதும் யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒன்றாகும்.

ஆனால் இன்று இலங்கையில் தமிழ்மொழி அடைந்து வரும் மாற்றத்தைப் பார்க்கும்பொழுது வெகுவிரைவில் இந்த நாட்டில் தமிழ் மொழி முற்றாக உருமாறி அதிலிருந்து ஒரு புதிய மொழி தோன்றி விடுமோ என்று அச்சப்பட வேண்டியிருக்கின்றது. அந்த அளவுக்கு இன்று தமிழ்மொழி இந்த நாட்டில் 'அறம்புறமாக' மாற்றம் அடைந்து கொண்டுவருகின்றது. அரசாங்கத்தின் ஆதரவில்;

முதலில் தமிழ் எழுத்துக்களை எடுத்துக்கொள்வோம்.

பெரும்பாலும் எல்லா மொழிகளுக்கும் வரிவடிவம் உண்டு. அந்த வரிவடிவம் ஆண்டாண்டு காலமாக திருத்தப்பட்டு செப்பனிடப்பட்டு வந்திருக்கின்றது.

தமிழ் எழுத்தின் இன்றுள்ள வடிவம் இற்றைக்குச் சில நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்த வரிவடிவம் போல அல்ல. இன்றைக்கு இருக்கும் வரிவடிவம் அப்பொழுதிருந்த வரிவடிவத்திலும் பார்க்க வடிவானது, அழகானது திருந்தியது. இன்றிருக்கும் அழகான வரிவடிவம் ஏற்படுவதற்கு எத்தனையோ நூற்றாண்டுகளும் எத்தனையோ அறிஞர்களின் உழைப்புகளும் சென்றிருக்கின்றன. இவை எல்லாவற்றையும் இந்த நாட்டு அரசாங்கம் ஒருசில ஆண்டுகளில் அழித்துவிடுவதற்குக் கங்கணம் கட்டிக்கொண்டு நிற்கின்றது போலும்!

எழுத்தின் ஒவ்வொரு உறுப்புக்களும் அவ்வவ்வெழுத்துக்குத் தகுந்தவாறு அளவளவாக அமைக்கப்பட்டிருக்கின்றன. அது மாத்திரமல்ல எழுத்தின் கோடுகள் எந்த இடங்களில் தடிப்பாகவும் எந்த இடங்களில் மெலிவாகவும் இருக்கவேண்டும் என்றும்கூட வகுக்கப்பட்டிருக்கின்றது.

ஒரு மனிதனுடைய அவயவங்கள் எப்படி அளவளவாக அமையவேண்டுமோ அப்படியே எழுத்தின் அவயவங்களும் அளவளவாக அமைந்திருக்க வேண்டும். அன்றேல் அது அவலட்சணமாக மாத்திரமன்றிப் பயங்கரமாகவும் தோன்றும். அளவில்லாத அவயவங்களை வைத்து ஒரு மனிதனுடைய படத்தை வரைந்தால் அது எப்படி அவலட்சணமாகவும் பயங்கரமாகவும் தோன்றுமோ அப்படித்தான் பொருத்தமில்லாத அளவுகளை வைத்து எழுதப்படும் எழுத்துக்களும் தோன்றும்.

இன்று எங்கள் நாட்டில் அரசாங்கத்தினுல் அரசாங்க அலுவலகங்களிலும் மற்றும் பொது இடங்களிலும் எழுதப்படும், எழுதுவிக்கப்படும் தமிழ் எழுத்துக்கள் இப்படித்தான் அவலட்சணமாக எழுதப்படுகின்றன. பயங்கரமாகக் காட்சி அளிக்கின்றன.


கூடுகின்ற இடம் என்றெல்லாம் கேள்விப்பட்டிருப்பீர்கள். ஆனால் பெண்கள் பழுக்கின்ற இடத்தைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கின்றீர்களா?

கொழும்பில் சில இடங்களில் 'தையல் பழக்கும் இடம்' நடாத்தப்பட்டு வருகின்றது கொழும்பு மாநகர சபையினால். என்ன மாதிரிப் பழுக்க வைக்கிறார்கள் வைக்கப்படுகிறார்கள் என்பது எனக்குத் தெரியாது. வாழைக் குலைக்குச் செய்வது போல ஏதாவது புகை'கிகை' ஊதுகிறார்களோ என்னவோ!

அழகாக எழுதியிருக்கிறார்கள். மேலும் அவர்கள் வெளியிடும் தமிழ் செய்தி வெளியீட்டைப் பாருங்கள் எவ்வளவு அழகாகவும் அருமையான தமிழ் வசன நடையிலும் வெளியிடுகிறார்களென்று.

ஆனால் எங்களிடம் வரி வாங்கும் அரசாங்கமோ எங்களுடைய வரிப்பணத்தைக் கொண்டே எங்களுடைய மொழியைச் சிதைத்துச் சின்னாபின்னம் ஆக்கிக் கொண்டு வருவதை நாம் எப்படிச் சகித்துக் கொண்டிருக்க முடியும்?

உதாரணமாக:



சிங்களத்தில் 'ம', ® என்று எழுதப்படுகின்றது. இம் '®' தமிழ் 'ம' விலிருந்தே தோன்றியதென; மொழியியல் அறிஞர்கள் சிலர் எடுத்துக்காட்டியிருக்கின்றனர்.

அதாவது தமிழ் 'ம'வின் இடப்பக்கத்திலிருந்து அதை சுற்றிவளைத்துஒருவட்டம் எழுதி



வாக்கப்பட்டுப் பின்பு தமிழ் 'ம' எழுத்து மறைந்து ஒரு சிறிய சுழியாகி '®' வானது என்றும் எடுத்துக்காட்டியுள்ளனர்.

இவ்வெழுத்து தமிழிலிருந்து சிங்களத்துக்குச் சென்றதினால் தமிழுக்கு ஒரு கேடும் ஏற்படவில்லை. ஆனால் தமிழ் எழுத்துக்கள் இப்பொழுது சிங்கள ரூபம் எடுத்து தமிழில் நடமாடுவதென்றால் அதைப் பொறுத்துக்கொண்டிருக்கமுடியுமா? வெகுவிரைவில் இலங்கையில் தமிழ் எழுத்துக்கள் எல்லாமே உருத்தெரியாமல் மாறிவிடுமன்றோ?

தமிழ் எழுத்துக்களின் இப்படியான உருமாற்றம் பெயர்ப்பலகைகளில் மாத்திரமல்ல சில தமிழ்ப் பத்திரிகைகளிலும் நடைபெறுவதையும் காணலாம். சிங்கள முதலாளிமார்களால் நடாத்தப்படும் இப்பத்திரிகைகள் தமிழை வெகு விரைவில் சின்னாபின்னப்படுத்திவிடும் என்றுதான் எண்ணத்தோன்றுகின்றது.

இனி தமிழ்ச் சொற்களும் வசனங்களும் எழுதப்படும் விதத்தைப் பார்ப்போம்.

இந்நாட்டில் சில இடங்களில் கள்ளுத் தவறணைகள் இருப்பதை யாவரும் அறிவர். ஆனால் கள்ளு ஊறும் குழி இருப்பதை யாராவது கேள்விப்பட்டிருக்கிறீர்களா? கொட்டாஞ்சேனையிலுள்ள 'கொனிஜ்'வீதி வழியாகச் சென்று பார்த்தால் அங்கு ஒரு "கள் குழி ஒழுங்கை" இருப்பதைக் காணலாம்! கள்குழியில் கள்ளு ஊறிக்கொண்டிருக்கத்தானே வேண்டும்! அது தான் போகட்டும்;

இது [illegible] இடத்தைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள்; அல்லது பெண்கள் பழுக்கின்ற இடம்?


சில தவிப்பட்டவர்கள் 'பெண் பழுது' பார்ப்பதும் (அதாவது பேனை திருத்துவதும்) இங்கு கவனிக்கப்படத்தக்கது.

பல இடங்களில்—அரசாங்க அலுவலகங்கள் உள்ளஇடங்களில்—'புள்ளில் மதியாதே' என்றும் எழுதப்படுகின்றது. அப்படி எழுதிவிட்டால் கூடப் பரவாயில்லை. 'புள்ளில்மதியாதே' என்று கூட அல்லவா எழுதிவிடுகிறார்கள். அப்படித்தான் எழுதி விட்டாலும் பரவாயில்லை. அதை என்று கூட அல்லவா எழுதி விடுகிறார்கள்!

பெரும்பாலும் தமிழ் என்று எழுதிவைக்கப்பட்டிருக்கும் வார்த்தைகளைப் படித்தறிவதற்குத் தமிழ்ப் பண்டிதர்களாலும் கூட முடியாது. கல்வெட்டு ஆராய்ச்சியில் தேர்ச்சி பெற்றவர்கள் கூட வாசிப்பார்களோ என்பது ஐமிச்சம்தான்!

சில இடங்களில் தமிழ் என்று சொல்லிப் படுதூஷண வார்த்தைகளை எழுதி வைத்திருக்கிறார்கள்!

இவை, இப்படி இருக்க, இன்று இங்கு பேசப்பட்டு வரும் தமிழிலும் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுக்



தமிழை இபபடி எழுதி வந்தால் வெகு விரைவில் இந்த நாட்டில் தமிழ் அழிந்து ஒரு புதிய மொழி தோன்றிவிடக் கூடும் என்று பயப்படாமல் இருக்க முடியுமா?

கொள்ளுப்பிட்டியில்—கொள்ளுப்பிட்டி என்றதும் எனக்கு ஒன்று ஞாபகம் வருகின்றது. கொள்ளுப்பிட்டியை 'கொளளுபபிடடி' என்றும் எழுதிவைத்திருக்கிறார்கள். ஒருவேளை தமிழர்களின் மெய்யில் (உடம்பில்) கத்தியால் குத்தினாலும் குத்துவார்கள், ஆனால் தமிழ் மொழியின் மெய்யில் (மெய் எழுத்தில்) பேனாவினால் கூடக் குத்தமாட்டார்கள். அந்த அளவுக்கு தமிழ் மொழியின் மீது இரக்கம் போலும்!

அதனால்தான் போலும் கல்வித் திணைக்களங்கள் கல்வித் திணைக்களங்களாகவும் கல்வி அதிகாரிகள் கலவி அதிகாரிகளாகவும் மாற்றப்பட்டுள்ளனர்!

கொள்ளுப்பிட்டியிலுள்ள பிரித்தானிய தூதராலயத்தின் சுவரில் 'பிரித்தானிய தூதராலயம்' என்று தமிழிலும் வெள்ளித் தகட்டில் எழுதிப் பொருத்தியிருக்கின்றனர். எப்படிப்பட்ட அழகான எழுத்துக்கள்!

தாங்கள் அவர்களுக்குச் சேவை கொடுத்ததுமில்லை. வரி கொடுப்பதுமில்லை. இருந்தும் அவர்கள் எங்களுடைய மொழியை எவ்வளவு

கொண்டுவருவதைக் கவனிக்கலாம்.

முன்பெல்லாம் சிலர் தங்களுடைய பேச்சில் ஆங்கில வார்த்தைகளையும் கலந்து பேசிவந்தனர். ஆனால் இப்பொழுது அநேகர் சிங்கள வார்த்தைகளைக் கலந்து பேசிக்கொண்டு வருகின்றனர். சிங்களச் சொற்கள் மிகவும் அதிகமாகவும் வேகமாகவும் கலந்து கொண்டு வருகின்றன.

முன்பெல்லாம் இல்லை என்பதற்குச் சிலர் 'நோ' என்று சொல்லி வந்தனர். இப்பொழுதென்றாலோ பலர் "நாய்" என்று சொல்லி வருகிறார்கள். சிங்களத்தில் 'நாய்'என்றால் இல்லை என்று அர்த்தப்படும்.

இதே போல, கெதியாக இங்கேவா என்பதற்கு 'இக்மணிங் இங்கே வதங்' என்று சொல்லுகிறார்கள்.

'புட்டுவத்தைச் சூனமெத்தனைவ' என்றும். 'ருமாஜே என்ன நடக்குமென்றா அத கியண்ட பாய்' என்றும் பேசி வருகிறார்கள்.

இது மாத்திர மல்ல. உச்சரிப்பிலும் ஒரு விதமாற்றம் ஏற்பட்டு வருகின்றது. அதை எழுத்தில் காட்ட முடியாததால் விட்டு விடுகிறேன்.

இப்படிப்பட்ட பேச்சும் நான் மேலே காட்டியுள்ள எழுத்து வடிவமும் சேர்ந்து கொண்டால் இந்த நாட்டில் வெகு விரைவில் ஒரு புதிய

(7-ம் பக்கம் பார்க்க)

அருள் மா. இராசேந்திரம்

## தாழ்வு நிலை...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

குங்கள். இந்நிலை உருவாகிய பின்புதான் சிங்களத் தோழர்களே ஒன்று படுங்கள்! உலகப் பாட்டாளிகளே நீங்கள் எங்கள் கூட்டாளிகள்! என்று விண்ணதிர முழங்குவதில் பொருள் உண்டு தெளிவுண்டு என்று தெளிவு படுத்துங்கள்: ஆதலால் இம் "மே" நாள் ஏமாந்த தமிழ் இனம் இனி ஏமாற மறுக்கிறதென்பதை உலகிற்கு எடுத்துக்காட்டும் திருநாளாக—பெருநாளாக விளங்க வேண்டும் என வேண்டி விடைபெறுவோமாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரசுக்கட்சித்தலைவர் தேர்தல் பொதுச் செயலாளர் அறிக்கை!

''எமது கட்சியின் 12வது மாநில மாநாடு எதிர்வரும் மே மாதத்தில் நடைபெற இருக்கின்றது. அதை யொட்டி கட்சித் தலைவர் தெரிவு எமது அமைப்பு விதிகளின் பிரகாரம் நடைபெறும்.

''மே மாதம் 5ம் திகதிக்கு முன் எனக்குக் கிடைக்கக் கூடியதாக நியமனப் பத்திரங்கள் அனுப்பப்படவேண்டும். அங்ஙனம் தலைவர் பதவிக்கு அனுப்பப்படும் நியமன பத்திரங்களில் கட்சியின் ஆறு (6) இயங்கும் அங்கத்தினர் கையொப்பமிட்டுப் பிரேரித்து அனுசரணையாக இருத்தல் வேண்டும்: நியமிக்கப்படும் அபேட்சகர் எழுத்து மூலம் தமது சம்மதத்தைக்கொடுக்கவேண்டும். நான்கு வருடங்களாவது கட்சியின் இயங்கும் அங்கத்தவராக இருந்தவரே தலைவராகத்தெரிவு பெற அருகதையுடையவர் ஆவர்.

தயவுசெய்து இவ்வறிவித்தலைத் தங்கள் கிளை உறுப்பினர் எல்லோருக்கும் தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன்.

—இவ்வாறு தமிழரசுப் பொதுச்செயலாளர் திரு. சி. கதிரவேற்பிள்ளை பா. உ. கட்சிக்கிளைகளுக்கு அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளார்:

## கூலி வேலையும் தமிழனுக்கு இல்லை!

மட்டக்களப்பு அரசினர் மருத்துவ விடுதியில் அண்மையில் கூலி வேலைக்கு எட்டுப்பேர் தெரிவு செய்யப்பட்டனராம். இந்த எட்டுப்பேரில் நால்வர் சிங்களவர், நால்வர் முஸ்லிம்கள். தமிழர் ஒருவர் கூட இல்லையாம்!

ஐயகோ, தமிழா! உன் சொந்த மண்ணில் கூலிவேலை கூடவுமா உனக்கு இல்லை?

# தமிழில் தொடர்பு கொள்ள தமிழாசிரியர்கள் முடிவு!

அரசினர் தமிழர் ஆசிரியர் சங்க அட்டன் கிளை நிர்வாகசபைக் கூட்டம் 1-4-73 அன்று புனித பொஸ்கஸ் கல்லூரியில் நடைபெற்றது. அன்றைய கூட்டத்திற்கு சங்கத் தலைவர் திரு. து. பரராசசிங்கம் தலைமை வகித்தார்.

சங்கச் செயலாளர் திரு. ந. சிவபாதம் கல்வித்திணைக்களத்தின் சுற்று நிருபங்கள் அனைத்தும் தனிச் சிங்களத்தில் அனுப்பிவைக்கப்படுவதையும், அதனால் தமிழ் தலைமையாசிரியர்கள் மொழி பெயர்க்க வசதியின்றிக் கஷ்டப்படுவதையும் சபையின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்.

சிங்கள சுற்று நிருபத்துடன் தமிழ்மொழி பெயர்ப்பு அனுப்பிவைக்கப்பட வேண்டிய அவசியத்தை விளக்கி நுவரெலியா கல்வித் திணைக்கள வித்தியாதிபதியுடன் நேரில் தொடர்பு கொண்டு பேசி ஒரு சுமுகமான முடிவுக்கு வரவேண்டுமென்றும் மேலும் சபையினரைக் கேட்டுக் கொண்டார். சபையினர் இந்த ஆலோசனையை ஏகமனதாக ஏற்று இரண்டாம் தவணை தொடங்கும் போது இது பற்றி நேரில் சென்று தெரிவித்து நிவாரணம் பெற வேண்டுமென்று சபை தீர்மானித்தது.

மேலும் செயலாளர் பேசும்போது, கடந்த காலங்களில் அட்டன் கிளை, கல்வித் திணைக்களத்துடன் ஆங்கிலத்திலேயே தொடர்புகொண்டதென்றும், நிர்வாக சபை உறுப்பினர்களுக்கும் கூட்ட அறிவித்தல்கள் ஆங்கிலத்திலேயே அனுப்பிவைக்கப்பட்டிருந்ததென்றும், ஆங்கிலத்தைக் கைவிட்டு எமது தொடர்புகளைத் தமிழிலேயே வைத்துக்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். தமிழில் தொடர்பு கொள்வதால் கல்வித்திணைக்களம் தமிழிலேயே தமிழ் ஆசிரியர்களுடன் தொடர்பு கொள்ள வழி ஏற்படும் என்றும் தமது பேச்சில் குறிப்பிட்டு தமிழாசிரியர்கள் தமிழிலேயே தொடர்பு கொள்வதை தயங்காது செயலில் காட்டவேண்டிய சந்தர்ப்பம் வந்து விட்டதென்றும் மேலும் குறிப்பிட்டார்.

செயலாளர் திரு. த. சிவபாதத்தின் ஆலோசனையை சபையினர் ஏகமனதாக ஏற்றுக்கொண்டனர்.

## தியாகராஜகான சமாசத்தின் இசை விழா!

''இலங்கை தியாகராஜ கான சமாஜத்தினர் வருடா வருடமுப நடாத்தும் இசை விழாவினை இம்முறை மே மாதம் 3ம், 4ம், திகதிகளிலும், ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் உற்சவத்தினை மே மாதம் 5ம் 6ம் திகதிகளிலும் வெள்ளவத்தை சம்மாங்கோட்டார் ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலய மண்டபத்தில் வெகு விமரிசையாக நடாத்தவிருக்கின்றனர்.

இந்தியக் கலைஞர்களான வயலின் வித்துவான் மைசூர் திரு. எச். கே. நரசிம்மமூர்த்தி (திரு. எம். எஸ். கோபாலகிருஷ்ணனின் சிஷ்யன்), பாடகர் மதராஸ் திரு. கிருஷ்ணசாமி ஆகியோரும் இவ்விழாவில் பங்குபற்றவிருப்பது ரசிகப்பெருமக்களுக்கு ஓர் அரிய விருந்தாய் அமையும் என எதிர்பார்க்கலாம்.

இவ்விழாவில் வருடா வருடமும் முதுபெரும் கலைஞர் பலருக்கு இலங்கை தியாகராஜகான சமாஜத்தினர் பொன்னாடை போர்த்திப் பட்டமளித்துக்கௌரவித்து வருவது தெரிந்ததே. இம்முறை இவ்வாறு கௌரவிக்கப்படவிருக்கும் கலைஞர் பின்வருமாறு: வேணுகான வித்வான், திரு ம. சோமசுந்தரம், நடன ஆசிரியை, சங்கீத வித்வான் திருமதி விஜயலச்சுமி சண்முகம்பிள்ளை, கோட்டு வாத்திய வித்வான் திருமதி மனோரஞ்சிதம் லோகேஸ்வரம், ஓவியக் கலைஞர் திரு. வி. கனகலிங்கம் ஆகியோர்.''

—

## கோணேஸ்வரம் தமிழர் சொந்தம்!

''சரித்திர காலத்திற்கும் பௌத்த காலத்திற்கும் முற்பட்ட திருக்கோணமலையில் உள்ள திருக்கோணேஸ்வர திருத்தலத்தை, இந்துக்களின் ஆதிக்கத்திலிருந்து எடுத்து, பிற்காலத்தில் இலங்கைக்கு வந்து பௌத்தர்களாக மதம் மாறியவர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற அகில இலங்கை பௌத்த காங்கிரசின் ஒரு சிலரின் விபரீத முயற்சியை தமிழர் கூட்டணி வன்மையாகக் கண்டிக்கிறது.''

— மேற்படி தீர்மானம் 22-4-73ல் யாழ் நகரில் நடைபெற்ற கூட்டணி நடவடிக்கைக் குழுக்கூட்டத்தில் எடுக்கப்பட்டது.

—

குடியரசு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மே ஆறும் திகதி மன்னாரில் நடைபெறவுள்ள கூட்டணி நடவடிக்கைக் குழுக் கூட்டத்தில் மே 22-ல் துக்க தின அனுட்டானத்துக்கான திட்டங்கள் பகிரங்கமாக வெளியிடப்படும் என்று தெரிகிறது.

## தமிழர் கூட்டணியின் மே நாள் விழா

தமிழர் கூட்டணி மே நாள் விழாவைகொண்டாட ஏற்பாடுகளை செய்து வருகிறது. யாழ் நகரில் மே நாளை யொட்டி பிரமாண்டமான ஊர்வலமும் பொதுக் கூட்டமும் நடத்தப்படும் என்று தெரிகிறது. தமிழர் கூட்டணி சார்பான தொழிற் சங்கங்கள் இதில் பங்கு பற்றும்.

# சைவசமயத்துக்கு ஏற்பட்டுள்ள பயங்கர ஆபத்துக்கள்!

கடந்த 19 வருடங்களுக்கு மேலாக சைவப் பணியாற்றி வரும் கொழும்பு கொம்பனித்தெரு சைவமுன்னேற்றச் சங்கம் அரும்பாடுபட்டு 75,000 ரூபா செலவில் கட்டிய புதிய கட்டடத்தையும் காணியையும் காரணமேதுமின்றி அரசாங்கம் சுவீகரித்ததையிட்டு சைவ உலகம் பெரும் கவலையடைந்துள்ளது. இந்நாட்டிலுள்ள சகல மதங்களுக்கும், மதவழிபாட்டிற்கும் பூரண சுதந்திரமும் பாதுகாப்புமளிக்கப் பட்டிருப்பதாக புதியகுடியரசு அரசியல் சட்டத்தில் வலியுறுத்தப்பட்டிருந்த போதிலும் நடைமுறையில் மதங்களுக்கு குறிப்பாகசைவசமயத்திற்கு பெரும் ஆபத்து ஏற்பட்டு வருகிறது.

சைவர்களின் பிரசித்தி பெற்ற புனித தலமாக விளங்கும் கதிர்காமத்தில் அங்கு கதிரமலையில் கோவில் கொண்டருளியிருக்கும் பழைய முருகன் ஆலயம் சிதைக்கப்பட்டு விட்டது. வள்ளிமலைக் கோவில் பறிபோய்விட்டது. இராமகிருஷ்ணன் மடமும் ஏனைய சைவாலய மடங்களும் அகற்றப்படுகிறது. செல்லக் கதிர்காமத்திற்கு ஆபத்து வந்து கொண்டிருக்கிறது. யாவும் புனித நகரம் என்ற போர்வையில் நடைபெற்று வருகிறது.

சைவப்பணியாற்றுவதற்கு சைவப் பெருங்குடிமக்களின முயற்சியால் கொழும்பு கொம்பனித்தெரு வீதியில் கட்டப்பட்டு வந்த கலாச்சார நிலைய திறப்பு விழா நடைபெறவிருந்த சமயத்தில் திடீரென சுவீகரிக்கப்பட்டது சைவசமயத்தவர்களுக்கு இழைக்கப்பட்ட பெரும் அநீதியாகும்.

அந்நியர் ஆட்சி இந்நாட்டில் நிலவிய காலத்தில் சைவ சமயத்திற்கு ஏற்பட்ட ஆபத்தையும், இடர்ப்பாடுகளையும் எதிர்த்து தனியாக நின்று போராடினார் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் அவர் பிறந்திராவிட்டால் சைவமும், தமிழும் ஈழத்தில் தழைத்தோங்கியிராது. அந்நியரின் ஆதிக்கத்தை எதிர்த்து இந்நாட்டின் கலாச்சாரத்தை பேணிப் பாதுகாத்த நாவலரை இந்த அரசு ஒரு தேசிய வீரனாக கௌரவித்து, அவர் பிறந்த கிராமமாகிய நல்லூரில் ஓர் நாவலர் கலாசார நிலையத்தை உருவாக்க முனைந்திருக்கும்இவ்வேளையில் இத்தகைய துர்ப்பாக்கிய சம்பவம் நிகழ்ந்ததையிட்டு சைவ மக்கள் கவலை அடைந்துள்ளனர்.

சைவசமயத்திற்கு நிகழ்ந்த அநீதிகளையும் கொடுமைகளையும் அஞ்சா நெஞ்சத்தோடு எதிர்த்துப் போராடக்கூடிய நாவலர் வழிவந்த சைவர்களாகிய நாம், அவர் பாதுகாத்த சைவத்திற்கு ஆபத்து ஏற்படுவதைச் சகிக்கமுடியாது.

சுவீகரித்த சைவமுன்னேற்றச் சங்கக்கட்டிடத்தையும், காணியையும் அச் சங்கத்தாரிடம் கையளிக்குமாறு அகில இலங்கை இந்துமாமன்றமும், ஏனைய சைவ சமய நிலையங்களும் தங்களுக்கு பணிவான வேண்டுகோள் விடுத்திருந்தன. ஏறக்குறைய மூன்று மாதங்களாகியும் இது விடயம் பற்றி எவ்வித நடவடிக்கையும் தங்கள் அமைச்சு எடுக்காதது சைவ உலகத்தை அவமதிப்பதாகும்.

மீண்டுமொருமுறை இது விடயத்தை தங்கள் கவனத்திற்கு கொண்டுவருவதோடு இதுபற்றிய தங்கள் பதிலை விரைவில் அனுப்பிவைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

'இது விவகாரத்தில் திருப்திகரமான பதிலெதுவும் கிடைக்கவில்லையாயின் நான் ஒரு நாள் உண்ணுவிரதத்தை மேற்கொண்டு இந்நாட்டில் சைவசமயத்துக்கும், சைவ சமய நிலையங்களுக்கும் ஏற்படும் ஆபத்தை மாண்புமிகு பிரதம மந்திரி அவர்களுக்கு எடுத்துக்கூற விரும்புகிறேன் என்பதை தங்களுக்கு அறியத்தருகின்றேன்.'

—இவ்வாறு திரு. ஐ. தி. சம்பந்தன் காணியமைச்சருக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

## சிறுபான்மை...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

துவம், இவரைப் பற்றிக் கூறிய கருத்துக்கள் பிற நாட்டு மக்கள் இவர் மீது எவ்வளவு தூரம் உயர்ந்த கருத்துக்களை வைத்திருந்தார்கள் என்பதை எடுத்துக் காட்டுகின்றது.

ஜனநாயகத்தில் முழு நம்பிக்கைகொண்டு சர்வாதிகாரமும், சுயநலமும் நாட்டின் நற்பணிக்கு முட்டுக்கட்டை போடுமென உணர்ந்து, கொள்கையை விட்டுக்கொடுக்காமல், குறிக்கோளை மறவாமல், பகைமையைப் பாராட்டாமல், அரசியல் பாதகம்செய்யாமல் மாற்றுக் கருத்துடையோரையும் மதித்து நாகரீகமும், நாணயமும் மிக்க ஒப்பற்ற தலைவர் அமரர் டட்லியின் ஆன்மா சாந்தியடைய அவரில் அன்பு வைத்திருக்கும் தமிழ் மக்கள் சார்பிலே எமது தலைவர் திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்கள் சார்பில் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.'

—

என்றே...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

யையும் ஒன்று படுத்தி சிங்கம் போல் சீறியெழுந்து எம்மொழி காக்கப் புறப்படுவோம் அங்கு, இறப்பினும் சிங்கமாக இறப்பாக இறப்போம், எம் இனத்திற்காக இறப்போம், எம் மொழிக்காக இறப்போம். எம் பிணத்தின் மேல் தமிழ்த்தாயின் [illegible] கோட்டை உயரட்டும். [illegible] தமிழ்த்தாய் அரசோச்சட்டும்.

## தமிழ்மொழி...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

மொழி தோன்றி விடக் கூடுமென்று பயப்படுவதில் நியாயம் உண்டுதானே.

தமிழ் மொழியாம் நம் தமிழ் அன்னை 'கன்னடமும் களிதெலுங்கும் கவின் மலையாளமும் துளுவும்' என்று சுமார் இருபது பிள்ளைகளைப் பெற்றெடுத்திருக்கிறார்கள் என்று மொழியியல் அறிஞர்கள் கூறுவர்.

மனிதர்களே குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்ளும் இந்த நாட்களில் நம் தமிழ் அன்னை மீண்டுமொரு பிள்ளையைப் பெறுவது அவசியமா? அனுமதிக்க முடியுமா?

—

தமிழர் தந்தை...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கிற் மற்றுமொரு கையெழுத்துப்போட்டு விடாமல் இலங்கை தமிழர் பிரச்சினையை பிரதம மந்திரி கொஞ்சம் அக்கறையுடன் அணுக வேண்டும். அவர்களை சந்திக்குமாறுசாவோடுபோராடிக்கொண்டிருக்கும் தமிழர்களை காப்பாற்றுமாறும் ஆயிரக்கணக்கில் நமது பிரதமருக்கு கடிதங்களும் தந்திகளும் அனுப்புங்கள்.

'இந்தியப் பிரதமரும் இந்த விஷயத்தில் தலையிடவில்லை என்றால் தமிழர்கள் லட்சக்கணக்கில் இந்து மகாசமுத்திரத்தில் [illegible] இருக்கும்.

''செல்வம் தாராளமாக இருக்கின்றது என்ற காரணத்தால் நியாய விரோதமான காரியங்களை ஒரு போதும் செய்யலாகாது.

—விதுரநீதி.

மில்க்வைற் நீலசோப் மேலுறைகளை சேகரித்து அனுப்பி அறிவு நூல்களை வாங்கிப் படியுங்கள்.

**மில்க் வைற் சோப் தொழிற்சாலை**
**த. பெ. இல. — 77, யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள ஏகாதிபத்தியமே! செந்தமிழ்க்காளைகளை சித்திரவதைசெய்யாதே!

## நீதிமன்றத்தின் முன்னர் கொண்டுவா! இன்றேல் அவர்களை உடன் விடுதலைசெய்!!

இன்று ஈழத்தமிழ்த் தாயின் இங்களத்தமிழ் இளைஞர்கள் ஏராளமானோர் சிறையில். ஏன்? எதற்காக? என்ற கேள்விக்கு இன்று வரை பதில் இல்லை. இனியும் கிடைக்கப்போவதில்லை. எங்கள் இளைஞர்கள் என்ன குற்றம் செய்தார்கள்? சில காலத்துக்கு முன்பு சிங்கள இளைஞர்கள் நாட்டைக் கவிழ்க்கப்புரட்சி செய்தது போல் நம் தமிழ் செல்வங்கள் ஏதாவது செய்தார்களா? கிளர்ச்சி செய்த சிங்கள இளைஞர்களைக் கூட இன்று நீதியின் முன்பு நிறுத்தியிருக்கின்றார்கள். ஆனால் குற்றமெதுவும் செய்யாத தமிழ் இளைஞர்கள் மீது இது வரை எதுவித விசாரணையுமில்லை விளக்கமுமில்லை. இதுதானா சோசலிசம்? இதுதானா ஜனநாயகம்?

நாங்கள் உரிமையோடு வாழ வேண்டுமென்று ஆசைப்படுவது குற்றமா? அரசியல் சட்டத்திலே தமிழுக்கு இடமில்லை என்ற உண்மையைச் சொல்வது குற்றமா? தரப்படுத்தல் என்ற போர்வையில் தமிழர்களின் கல்வியில் மண்தூவப் படுகின்றது என்று சொல்வது குற்றமா? உண்மையைச் சொல்பவனுக்குச் சிறைத் தண்டனையா? உரிமை என்று கேட்பவனுக்கு கைவிலங்கா? ஜனநாயக நாட்டிலே இப்படி ஒரு விசித்திரம் நடைபெறுவதை எங்காவது பார்த்ததுண்டா? சோசலிசம் பேசும் நாட்டில் ஓர் இனம் அடிமையாக வாழ்ந்து கொண்டிருப்பதை எங்காவது கேட்டதுண்டா?

சிறையிலே இருக்கும் இளைஞர்களுக்குப் பல இன்னல்களைச் சிங்கள ஆட்சியினர் செய்வதாக நாடெங்கிலும் வதந்திகள் பரவியிருக்கின்றன. எப்படி இந்த வதந்திகள் பரவியதோ எங்களுக்குத் தெரியாது—ஆனால் நெருப்பில்லாமல் புகைப்பதில்லையல்லவா? பல சிங்களவர்களுக்கு மத்தியிலே ஒரு சில தமிழ் இளைஞர்களைச் சிறை வைத்திருக்கின்றார்களாம்—சிங்களவர்கள் தமிழ் இளைஞர்கள் மீது தங்கள் கைவரிசையைக் காட்டுகின்றனராம் இதைவிட உண்மையைச் சொல்லு என்று கூறி வேறு சித்திரவதைகளும் செய்கின்றனராம். இது உண்மையோ பொய்யோ தெரியாது. ஆனால் இன்றைய நிலையைப் பார்க்கும் போது உண்மை என்று கூட நம்பவேண்டியிருக்கின்றது. ஏனென்றால் சிறையில் வைத்திருக்கும் இளைஞர்களை போய் பார்ப்பதற்குத் தடை விதிக்கப்பட்டிருக்கின்றது. அதுமட்டுமல்ல சில இளைஞர்களை எங்கே சிறை வைத்திருக்கின்றார்கள் என்பதுகூட எங்களுக்குத் தெரியாது. இந்த நிலையில் நாட்டில் பரவும் வதந்திகள் உண்மையாக இருக்குமோ என்று நாம் சிந்திக்க வேண்டியிருக்கின்றது.

### நெடுங்கேணி நவம்

சிங்கள ஆட்சியே! எங்கத் தமிழ் இளைஞர்களை விடுதலை செய்! இன்றேல் நீதியின் முன்பு நிறுத்து. இருட்டறையில் வைக்காதே — எங்கள் தங்கங்களுக்குச் சித்திரவதை செய்யாதே உண்மைக்கும் ஒரு காலம் வரத்தான் போகின்றது. அப்போது சிங்கள ஆட்சியின் உயர் குணம் தெரியத்தான் போகின்றது. பத்திரிகைகளின் ஒருபக்க விளம்பரத்தால் ஒரு சில நாளைக்குத்தான் உண்மையை மறைத்து வைக்க முடியும் — நீதியை எதிர்த்து வாதாட அநீதியால் ஒருபோதும் முடியாது—நியாயத்தின் முன்பு அநியாயம் வெற்றி கொண்டது கிடையாது — காலம் ஒருநாள் மாறத்தான் போகின்றது—கைகொட்டிச் சிரிப்போர்களின் செருக்கு அடங்கத்தான் போகின்றது—தமிழினம் விடுவது இரத்தக்கண்ணீர் — அந்தக் கண்ணீர் சிங்கள ஆட்சியினருக்குத் தேன்துளிகளாகத் தெரியலாம். ஆனால் அந்த இரத்தக் கண்ணீர் கூரியவாளாகமாறுகின்ற காலம் வரும்போது இன்றைய துரோகக் கும்பலின் கதி தெரியத்தான் போகின்றது.

---

வரப்பெற்றோம்

**மாணிக்கம்** மே இதழ்

ஈழத்துத்தமிழ்ச் சஞ்சிகை உலகில் புதியதோர் ஏடாக வெளிவந்துள்ளது 'மாணிக்கம்' டாக்டர் மு. வரதராசனார், டாக்டர் கலைஞர் கருணாநிதி ஆகியோரது ஆசியுரைகளுடன் வெளிவந்துள்ள 'மாணிக்கம்' சிறந்த பொழுதுபோக்கு ஏடாகவும் அமைந்துள்ளது 60 பக்கங்களை கொண்ட இந்த சஞ்சிகையில், சிறுகதை சினிமா செய்திகள், படங்கள், கவிதைகள் நகைச்சுவைப்பகிடிகள், துணுக்குகள், மகளிர் மன்றம் போன்ற பல்வேறு அம்சங்களும் நிறைந்து காணப்படுகின்றன.

அட்டையில் கவர்ச்சிக் கன்னியொருத்தியின் எழிலோவியம் இடம்பெற்று சுவைஞரைச் சுண்டி இழுக்கிறது.

ஆசிரியர் :— திருமதி. சரோஜினி கைலாசபிள்ளை பி. எஸ். ஸி.

விலை :— சதம் ஐம்பது.

முகவரி :— 29, கல்யாணி வீதி, கொழும்பு—6.

---

# திருக்கோணமலை உருக்குலைகிறது!

புனித திருக்கோணமலை வாழ் தமிழ்ப் பேசும் அன்பர்களே, இதோ! நம் மூர் நட்டாற்றில் விடப்பட்டிருக்கின்றது.

அபயபுர- அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றது.

சிறிமாபுர- சித்திரவதை செய்யக்காத்திருக்கிறது.

மிகுந்துபுர- மிச்சத்தமிழ ரையும்விழுங்கப்பார்க்கிறது.

அக்போபுர- அழிக்கப் பார்க்கிறது.

மொறவெவ- முறைத்துக்கொண்டிருக்கின்றது.

குல்லவாடிய- கொல்லப் பார்க்கிறது.

மரக்கறி மார்க்கட் கூட மறத்தமிழன் மானத்தை வாங்குகிறது.

பொதுச்சந்தையோ போர்க்கோலம் பூணுகிறது.

இத்தனை பயங்கரங்களையும் பார்த்துக் கொண்டு நாம் இன்னும் பித்துப்பிடித்தவர்கள் போலிருக்கின்றோம்.

❖ ❖

எத்திப் பதிக்க விட்டு விட்டு ஏறி மிதித்து வெறித் தாண்டவமாட விட்டுவிட்டு எட்டப்பராக — ஏமாளிகளாக நாம் இருப்பதா? இத்தனை அநியாயங்களும் எங்கே நடக்கின்றன?

எங்கே! எங்கே!! எங்கே!

புனித பூமி — புண்ணிய மண்—தமிழ்ப் பேசும் இனத்தின் தனிச்சொத்து—எழுச்சி மிகு வீரர்களின் கோட்டம் —ஈழத்துப் பாஞ்சாலங்குறிச்சி என அழைக்கப்படும் திருக்கோணமலையிலேதான் இத்தனை அதிபயங்கரக் குடியேற்றங்களும் நடந்தேறியுள்ளன.

1952ம் ஆண்டு நாலாயிரம்.

1969ம் ஆண்டு பன்னிரண்டாயிரம்.

போகப் போகக் கூடிக்கொண்டேயிருக்கும்சிங்களக் குடியேற்றத்தைத் தடுத்து நிறுத்தித் தமிழ் நாட்டைக் காப்பாற்ற எவனும் முன்வராதது வெட்கத்திற்குரியது வேதனைக்குரியது.

❖ ❖

கந்தளையில் — கந்தையா போட்டிபோட முடியாது.

அம்பலாங் கொடையில்— ஆறுமுகத்துக்கு இடமில்லை.

ஆனால்......

திருக்கோணமலையில்...... அப்புஹாமியிலிருந்து அல்விஸ் வரை போட்டியிடுகின்றனர். இது ஏன்? இந்நிலை யாரால் வந்தது? இது எப்படி நிகழ்ந்தது?

அந்த உண்மையை உள்ளபடியே எழுதினால் நாம் ஆற்றப்படுவோம். இப்போது அது அவசியமில்லை: இன்று அவசியமானது நமது ஒற்றுமை—இன்று தேவை நமது இனம் — மொழி — நாட்டுப் பற்று

இத்தனைக் [illegible] ராசபுரம் இன்னும் பின்னமாகி சிங்களமயமாகிபுனித நகரமாகியும் விட்டது.

நமது தமிழர்கள் ஆண்ட நீர்கொழும்பு நமக்கே சிங்களம் படிப்பிக்கின்றது,

இந்து முஸ்லிம்கள் குடியேற வேண்டிய அம்பாறை அரோகராவாகி விட்டது.

கன்னித் தமிழன் ஆளவேண்டிய கந்தளாயில் கரோலிஸ் ஆட்சி செலுத்துகிறான்.

பைந் தமிழன் வாழவேண்டிய பதவியா பறிபோய் விட்டது.

கதிர்காமக் கந்தனும் சிங்களச் சோதனை எடுத்தாக வேண்டும்.

### எஸ். வில்வராஜன்

இப்போது......

எழுதவே கை நடுங்குகின்றது. சொல்லவே நாக் கூசுகின்றது...... ஆமாம்......

திருக்கோணமலை உருக்குலைந்து கொண்டிருக்கிறது.

மெல்ல மெல்லப்பாயும் குடியேற்றம் கன்னித்தமிழ்ப் பேசும் மக்களையும்—தமிழர்கள் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த ஈழத் தமிழ் நாட்டையும் விழுங்கி ஏப்பம் விடக்கூடிய பேரபாயம் பேரதிர்ச்சி ஏற்பட்டிருக்கின்றது:

❖ ❖

[illegible] வீரம் செறிந்தது. விவேகம் நிறைந்தது. தமிழ்ப் பேசும் சந்ததிக்கே சொந்தமானது. இப்போது மொழிப் போராட்டம் தேவையில்லை. அப்படி மொழிப் போராட்டம் அவசியமானால் அம்மொழியை நாம் எங்கு பேசுவது?

நமக்கென ஒரு நாடு வேண்டாமா?

அந்நாடு காக்கப்படவேண்டாமா?

நமது தமிழ் மண்ணின் விடுதலையை நாமே தேடிக் கொள்ள வேண்டாமா?

திருக்கோணமலையிலுள்ள பணம் பதுக்கும் தமிழ்ப் பெருச்சாளிகளெல்லாம் தங்கள் இரும்புப் பெட்டியை உடைத்தெறிய வேண்டும்.

வீட்டு மூலைக்குள் தூசு பிடித்துக்கிடக்கும் காசுகளெல்லாம் மறத் தமிழர் மாசகற்ற — மானம் காக்க வெளி வரவேண்டும்.

இறகு முளைத்த பணங்களை இறைத்து இனம் காக்க எழ வேண்டும்.

அப்படி வெளிவராத இரும்பிதயம் படைத்த பணங்களை வெளிவரச் செய்ய நாம் முனைய வேண்டும். மும்முரமாக முனைய வேண்டும்.

அப்போதுதான் நமது வெற்றிப்பாதை துலங்கும்.

அப்போதுதான் நமது விடிவு காலம் நெருங்கும்.

பணப் பெட்டிகள் மனம் மாறினாலும் — பணக்காரர்கள் மனம் மாற மாட்டார்கள் என்கிற நிலை திருக்கோணமலையிலே தொடர்ந்திருக்கும் வரை எமது புனித நாடு உருக்குலைந்து கொண்டுதானிருக்கும். இது பேருண்மை,

திருக்கோணமலையின் அர்ப்பணிக்கத் தயங்காத வீர உணர்வுள்ள வாலிபர்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

புயல் வேகத்தில் செயல்பட விரும்பும் சுத்த வீரர்கள் நிறைந்தது நம்மூர்.

கன்னித் தமிழ் நாட்டின் விடுதலைக்காகச் சிறை சென்றவன் குடும்பம் சஞ்சிக்கும் வழியின்றி ஏங்கித் தவிக்கும் பரிதாப நிலை உடைத்தெறியப்பட வேண்டும்.

அப்போதுதான்......

எதையும் தாங்கும் இதயங்கள் களத்திலிறங்கும். எமது தமிழ் நாட்டின் விடுதலை உணர்வு பிறக்கும்.

❖ ❖

இன்னமும் பொறுமைக்கு இடமுண்டோ?

இன்னமும் விடுதலை உணர்வின்றி இருப்பதா.

பொறுத்துப் பொறுத்துச் சிறுத்து விட்டோம்.

தன்மான உணர்வின்றி— சுயமரியாதையின்றி தமிழ்ப் பக்தி இன்றி இருப்பதா?

தமிழர் பிரதேசங்களையெல்லாம் சிங்கள ஏகாதிபத்தியத்திடம் பறிகொடுத்துவிட்டு நாம் எங்கேயடாபோவது?

எங்கே நமது மொழியைப் பேசுவது?

எங்கே நாம் வாழ்வது?

ஐயகோ! இந்த இழிநிலை போதும்! போதும்!!

எங்கள் நாட்டைப் பறிகொடுத்தால்......

இதையும் சிங்கள வெறியர்கட்குத் தாரை வார்த்துக் கொடுத்து விட்டு—

நாம் ஈழத்தில் எந்த மூலையில் ஒதுங்குவது?

சிந்தியடா தமிழா சிந்தி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# அத்தியாயம் (6)

வாழ்க்கையில் நாம் பெரும்பாலும் எதிர்பாராத ஒரு விடயம் எங்கே யாரை எப்பொழுது சந்திக்கப் போகின்றோம் என்று முன் கூட்டியே அறிந்து கொள்ள முடியாமைதான். பதிவாளர் இரத்தினவேல் திடீரென அங்கே வந்தது மட்டுமன்றி, 'சடப்ராஸ்கல்' என்று சுகுணவதி கூறியதையும் கேட்டிருந்தார். எனினும் திகைத்து நின்ற இருவரையும் பார்த்தும் பாராதவராகச் சென்று விட்டார்.

அன்று இரவு ஆண்கள் விடுதியில் சிவராசனைச் சந்தித்த பதிவாளர், 'என்ன தம்பி! 'சடப்ராஸ்கல்' என்று மிஸ் சுகுணதேவி சொல்லுமளவுக்கு என்ன தப்புச் செய்தீர்' என்றார்?

'சார் வந்து நாடகவிடயமாய் கொஞ்சம் கேலிசெய்தேன் அது———' என்று தயங்கினான்.

'நீங்கள் எதிலும் அளவுக்கு மீறி நடக்க முயற்சிசெய்யக் கூடாது சிவராஜ். அடித்துத் திருத்துவதற்கு நீங்கள் இன்னும் சிறுபிள்ளைகளல்ல யூ ஆர் அண்டகிராட்சுவேட் அண்டஸ்ரான்ட்.'

'ஜெஸ் சார்,'

'நாளைக்குப் பரீட்சையில் சித்தியடைந்ததும் இன்னோர் கல்லூரியின் ஆசிரியனாகப் போகவேண்டியவர்கள். இதை மனதில் வைத்துக் கொண்டே பகிடி சேட்டைகளையும் செய்யனும். நான் சொல்வதைக் கோபமாக எடுத்துக்கொள்ளக்கூடாது.'

'இல்லைசார் இனிமேல் இப்படி நடந்து கொள்ள மாட்டேன்.'

'நல்லது' என்று கூறிவிட்டுச் சென்றார்.

அவருடைய பெருந்தன்மையான குணத்தினாலேயே பட்டதாரி மாணவர்களைக் குழந்தைகளைப் போலப் பயமுறுத்திப் பணிய வைக்கின்றார். எந்தப் பொல்லாத மாணவனும் அவரைக்கண்டால் அடங்கி ஒடுங்கிவிடுவதுண்டு. எவரையாவது கண்டிப்பதாயின் தனிமையில் கண்டித்தும், பாராட்டுவதென்றால் பலர் முன்னிலையில் பாராட்டியும் உயர்ந்தவராக விளங்கும் இரத்தினவேலிடம் அவனுக்குக் கோபமுண்டாகவில்லையாயினும் சுகுணா மீது ஆத்திரம் பொங்கிக் கொண்டு வந்தது. சமயம் பார்த்து அவளை மட்டம் தட்ட வேண்டும் என்று கறுவிக்கொண்டான் சிவராசன்.

கல்லூரியின் மேல்மாடி ஒன்றினைப் பெரும் மண்டபமாக விட்டிருந்தனர். அம் மண்டபத்துக்கு 'ஹாட்லி ஹோல்' என்று அதைக் கட்டுவித்த அமெரிக்கரின் பெயரையே சூட்டியிருந்தனர். நவீன பாணியில் மின் சாரவசதியும், மின்விசிறிகளும், மேடை அமைப்பும் கொண்ட அந்த மண்டபத்திலேயே அன்று நாடகம் நடக்கவிருந்தது. அன்று சமூகம் கொடுத்திருந்தவர்களில் முக்கால் பங்கினர் பெரும் பணப் புள்ளிகளாவார்.

குறிப்பிட்ட நேரத்தில் செல்வி ராதாலட்சுமிசோமசுந்தரத்தின் வீணைக்கச்சேரி ஆரம்பமாகியது. முன் வரிசையில கல்லூரி நிர்வாகியான அமெரிக்கரும் அவரின் உறவினர்கள் சிலரும் இருந்தனர். வீணை இசை ஆரம்பமாகிப் பத்து நிமிடங்களில் கச்சேரி களைகட்டி விட்டது. மண்டபத்தில் அதுவரை இருந்த இரைச்சல் அடங்கி அமைதி குடிகொண்டது.

வாசுதேவன் ஒப்பனை அறையில் பல்லவ மன்னன் நரசிம்மவர்மனாக வேடமணிந்து கொண்டிருந்தான். ஒப்பனையாளரின் கைவண்ணம் அவனை சரித்திர புருஷனாக மாற்றிக்கொண்டிருந்தது. அவன் உருவம் தான் ஒப்பனை அறையில் இருந்ததே தவிர அவன்மனம் ராதாவின் வீணுகானத்தில் இலயித்திருந்தது. அவள் வீணை மீட்டும் காட்சியினைக் காண வேண்டும் என்ற துடிப்பினால் ஒப்பனையாளரைத் துரிதப்படுத்திக் கொண்டிருந்தான். ஒப்பனை முடிந்ததும் மேடையின் ஓரத்தில் வந்து நின்று அவளைப் பார்த்தான் வாசு. உண்மையில் கலைமகளே வீணையுடன் வீற்றிருப்பது போன்ற உணர்வேற்பட்டது அவனுக்கு.

மேடையின் வர்ண விளக்குகளின் ஒளியில் அவளுடைய அலங்காரம் பளிச்சிட்டுப் பிரகாசித்தது. பாரதியார் பாடிய,

''பட்டுக் கருநீலப் புடவை
பதித்த நல் வயிரம்
நட்டநடுநிசியில் தெரியும்
நட்சத்திரங்கள்''

என்ற பாட்டுக்கொப்பச் சேலை உடுத்து, மல்லிகையில் மாலை தொடுத்துக்கொண்டைக்குச் சூட்டி அவளிருந்த கோலம்... வாசுவின் மனதில் புனிதமான நினைவுகளையே தோற்றுவித்தது. வீணையின் தந்திகளில் அவளுடைய மென் தளிர்க்கரங்கள் துரித கதியில் இயங்கித் தவழ, முத்துமணிகள் போன்று வியர்வை முகத்தில் அரும்பிட தேவகானமோ எனும் படியாய் சுநாதவிநோதி ராக ஆலாபனையினால் எல்லோரது உள்ளங்களையும் இசை வெள்ளத்தில் ஆழ்த்திக்கொண்டிருந்தாள். இருந்தாற்போல என்ன நினைத்துக்கொண்டாளோ மேடையின் பக்கவாட்டில் அவள் பார்வை திரும்பியது. அங்கே பல்லவ சரித்திரத்தில் படித்த வீரபுருஷனை உயிர்பெற்று வந்திருப்பது போன்று நின்றிருந்த வாசுதேவனைப் பார்த்துவிட்டாள். அவள் இதயத்தின் துடிப்பு அதிகமாகியது. உடலில் ஓர் இனம் புரியா உணர்வு பரவியது. அவள் விரல்களில்கூட ஒரு வேகம்.

'தேவாதிதேவா ஸ்ரீ வாசுதேவா' என்ற கீர்த்தனையின் பல்லவியை அவள் மீட்டிய பொழுது சபையில் ஒரே ஆரவார ஒலி. நரசிம்மவர்மனாக நின்றிருந்த வாசுதேவனுடைய இதழ்களிலே புன்முறுவல். அவள் தன்னை மறந்தாள். தலைப்பட்டாள் தன் தலைவன்தானே எனும்படி அழகிய காவிய நயனங்களை மூடிக்கொண்டாள்.

இயற்கை அன்னையின் இறுகிய தழுவலினால் மலர்ந்த இன்பமலர்ச் சோலையின் நடுவே சிறு வாவி. அன்னப் பேடைகள் சிறகடித்து மகிழ்ந்து விளையாட கீழ்வானத்தில் பொன்னொளிர்ச் சந்திரனுடைய பூரண கலை வெள்ளம். கந்தர்வலோகம் என்று நினைக்கக்கூடிய அந்த இடத்தில் பளிங்கு மண்டபத்தில் வீணையுடன் வீற்றிருக்கின்றாள் ராதாலட்சுமி. அவள் தோளில் சாய்ந்துகொண்டு பூவினும் மெல்லிய பட்டுக் கன்னத்தைத் தடவிக்கொண்டிருக்கின்றான் வாசுதேவன்.

உண்மையில் அவர்கள் அந்தக் கோலத்தில் இல்லை. நரசிம்மனும் அவன் காதல் தெய்வமான சிவகாமியும் ஒன்றிணைந்து நிற்பது போன்ற தோற்றம். 'சிவகாமி! எனக்காக வீணை மீட்டுவதை நிறுத்தாதே. நீ இப்படி நாளெல்லாம் வீணை மீட்ட இந்த அழகிய பட்டுக் கன்னத்தை தடவிக் கொண்டிருக்கவேண்டும் போலிருக்கு! என்று கூறி, அவளை அப்படியே இழுத்தணைத்துத் தன் மடிமீது கிடத்தி விந்தைகள் பல செய்கின்றான். அதே வேளையில் இடி இடிப்பது போன்ற ஒலி. விழிகளைத் திறக்கின்றாள். சபையினர் கரகோஷம் செய்கின்றனர். அவள் கற்பனைக் கனவு கலைகின்றது. தான் கீர்த்தனையை முடித்ததினாலேயே சபையோர் அப்படிக் கரகோஷம் செய்வதை உணர்கின்றாள். அவள் நினைவுகள் எங்கெங்கோ சஞ்சரித்திருப்பினும் விரல்கள் எதுவித தவறுமின்றி இன்பகீதமிசைத்ததை எண்ணிப் பெருமிதமடைகின்றாள். வாசு நின்ற இடத்தைப் பார்க்கின்றாள். அங்கே அவனில்லை. அத்துடன் அவளுடைய கச்சேரி நிறைவு பெறுகின்றது.

ராதாலட்சுமி வீணை மீட்டி முடியதும், அவளது கச்சேரியை மேடையின் பக்கவாட்டில் நின்று வாசுதேவன் ரசித்ததையும் சுகுணாதேவி கவனித்துவிட்டாள். 'அவனுடைய தோற்றத்தில் அப்படி என்ன கவர்ச்சி! எதற்குமே ஏங்காத என் நெஞ்சம் ஏன் இப்படி ஏங்குகின்றது? வாசு! நீயும் ஓர் சாதாரண மனிதன்தான் ஆனால் உன்னிடம் உள்ள சில கொள்கைகள், செயல்கள் மற்றவர்களிடம் இல்லாத ஒருவித மாரீசக் கவர்ச்சியைத் தோற்றுவிக்கின்றது. எனது நினைவுகளைச் செயலாக்கிக் காட்டுகின்றேன் பார்! என்று கறுவிக்கொண்டாள். அதே சமயம் அவளை நோக்கி வாசுதேவன் வந்துகொண்டிருந்தான்.

'என்ன வாசு வீணை இசை ஓரே போரடிக்குது.' என்றாள் சுகுணாதேவி.

'நோ நோ, அப்படிச் சொல்வது தவறு. உங்களுக்குச் சங்கீதம் தெரியாது என்பதற்காக அவளுடைய திறமையைப் பாராட்டாவிட்டாலும், குறைகூறாமல் இருக்கலாமல்லவா?'

'ராதாவின் கச்சேரி நல்லதோ இல்லையோ அவளின் அலங்காரம் அழகாக இருக்கிறது.'

'பெண்களுக்கு வேறு என்ன வேலை. ஆடை அலங்காரம், நகை இவற்றைப் பார்ப்பதும் [illegible] உங்களுக்குப் பொப் மியூசிக் பிடிக்குமில்லையா?'

'ஆமாம்.'

'அதுதான் நாகரீகம். சர் நாடக இசையைப் பற்றிய அரிச்சுவடியை அறியாதவர்களெல்லாம் லைலா, பொப் போன்ற மேல்நாட்டு இசைகளை ரசித்துக் கேட்கின்றனர். அதே வேளையில் மேல்நாட்டவர்கள் எமது இசையில் மோகம் கொண்டு ஓடி வருகின்றனர். இதுதான் உலகம்' என்றான்.

'உங்களுடன் எதிலுமே கதைத்து வெல்லமுடியாது வாசு.'

'நான் வெல்ல வேண்டுமென்று கதைக்கவில்லை. உண்மையைக் கூறுகின்றேன்.'

'அதுசரி நாடகம் ஆரம்பமாகப் போகின்றது. எனக்குப் பயமாக இருக்கின்றது.'

துணிந்தபின் மனமே துயரம் கொள்ளாதே என்று பாடுங்கள் பயம் போய் விடும்.'

'எதிலுமே இந்தக் கொள்கையுடையவன் நான் ஆனால் உங்களை———' என்று நிறுத்தினான்.

அதற்கிடையில் மேடை அமைப்பு முடிந்து நாடகம் ஆரம்பமாவதற்கான முதல் மணி அடிக்கப்பட்டது.

நாடகம் முடிந்த அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமை லீவு நாள் மறுநாள் திங்கட்கிழமையன்று வாசுதேவன் கல்லூரிக்கு வரவில்லை. அவனை எதிர்பார்த்தவர்களுக்கெல்லாம் ஏமாற்றம். ராதாவுக்கு அன்று எதையோ இழந்தது போன்ற உணர்வு. அதே சமயத்தில் கல்லூரி மாணவிகளின் சிண்டல கதைகள் அவள் உள்ளத்தைச் சித்திரவதைப்படுத்தின. அன்றுமத்தியானம் கல்லூரி நூல்நிலையத்திலிருந்து தன் மன உணர்ச்சிகளை யெல்லாம் கொட்டி ஒரு கடிதம் எழுதி கல்லூரிக்கு அருகாமையிலுள்ள தபாலாபீசில் போஸ்ட் செய்து விட்டாள்.

நாடகம் முடிந்த அன்று இரவு விடுதியிலேயே தங்கியிருந்தான் வாசுதேவன் மறுநாட்காலையே வீட்டுக்குச் சென்றான். அன்று தலைவலி என்று ஆரம்பித்து மறுநாள் காய்ச்சலும் சேர்ந்துகொண்டது. நாடகத்தின் பொழுது சுகுணாதேவி நடந்துகொண்ட விதம் அவனைச் சிந்திக்கத் தூண்டியது. உண்மையிலேயே அவள் வேண்டுமென்றுதான் அப்படி நடந்துகொண்டாளா? இல்லையேல் உணர்ச்சிவசப்பட்டு தன்னை மறந்த நிலையில் நடந்து கொண்டாளா?

எப்படி இருந்தாலும் காட்சிகள் இயற்கையாக அமைந்து விட்டன என்று பத்மநாதன் பாராட்டினாரே அதுபோதும் என்று நினைத்தவனாக அந்நினைவுக்கு முற்றுப் புள்ளி வைக்க முயன்றான். எனினும் அன்றிரவு பூராவும் ஹொஸ்டலில் மாணவர்களுடைய கேலிப் பேச்சில் தன்னுடைய பெயர் சுகுணாவின் பெயருடன் சேர்ந்து அடிபட்டதை நினைக்கும் பொழுது அது பெரும் பிரச்சினையை உருவாக்குமோ என்றும் அஞ்சினான்.

மறுநாட் காலை ஏழரை மணியளவில் தபால் வந்ததும் அவசரமாகப் பிரித்துப் படித்தான். அவனுடைய ஆச்சரியம் பன்மடங்காகப் பெருகியது. ராதாலட்சுமி எழுதிய ஒவ்வொரு வரியும் அவனைச் சிந்திக்கத் தூண்டியது மட்டுமன்றி, சித்தப் பிரமையடையவும் செய்யும் போலிருந்தது. அச் சமயத்தில் 'வாசு அண்ணு' என்ற குரல் அறைவாசலில் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினான்.

'என்னண்ணு அப்படிப் பார்க்கிறே?' என்றாள் வாசலில் நின்ற பருவக் குமரியான சித்திரா.

'நீ———நீ———' என்றவன் மயங்கிக் கட்டிலில் சாய்ந்தான்.




## இ. தொ. கழக செயலாளர் முழக்கம்

கடந்த 1.4.1973 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இராகலை இ. தொ. கழக பணிமனையில் நடைபெற்ற தலைவர்மார்கள் கூட்டத்தில் கழகப் பொதுச் செயலாளர் திரு. க. பரராஜசிங்கம் அவர்கள் உரையாற்றியதாவது.

''வாழ்க்கைச் செலவுகள் இன்றைய சூழ்நிலையில் ரொக்கட் வேகத்தில் உயர்ந்து கொண்டே போகின்றது ஆனால் இந்நாட்டின் பொருளாதாரத்தை 90% பெருக்கும் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு மட்டும் வாழ்க்கைச் செலவை சமாளிக்கக் கூடியவாறு கூட சம்பள உயர்வு வழங்க இந்த மக்கள் அரசாங்கம் இதுவரையில் எந்த வொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. இந்நிலையில் தோட்டங்களில் ஏற்படும் வேலைநீக்கம்போன்றவைகளை எதிர்த்து தொழில் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர அரசாங்கம் உத்தியோக மொழியான சிங்களத்தை கருமமொழியாக்க கட்டாயப் படுத்துகின்றது. அண்மையில் ஒரு தோட்டத் தொழிலாளர் ஆங்கில மொழியில் தாக்கல் செய்திருந்த தொழில் நீதி மன்ற மனுவை ஒரு நீதிமன்றம் நிராகரித்து இருக்கின்றது இதுபோன்ற நடவடிக்கைகளால் நாளுக்கு நாள் தமிழ் பேசும் மக்களின் உரிமைகள் ஒடுக்கப்பட்டுக்கொண்டு வருகின்றன.'

''இந்நிலையில் தமிழ் மொழியைத் தவிர வேற்று மொழியறியாத இந்த தேயிலைத்தோட்ட தொழிலாளர்களுக்கு அரசாங்கக் கடிதங்களை அரசாங்கம் முழுச்சிங்களத்திலேயே அனுப்புகின்றது. இதனை வாசித்தறிய ஒரு பேக்கரிக்காரனையோ, அல்லது தமிழ் தெரிந்த சிங்களப் பிரமுகரையோ நாடி இதன் பொருளை அறிய வேண்டியிருக்கின்றது. அரசாங்கம் கடிதங்களை தமிழ் பேசும் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கும்-பொது [illegible] பயன் படுத்த இயலாது மிக்க சிரமத்துக்குள்ளாகின்றனர். இத்தருணத்தைப் பயன் படுத்திக் கொள்ளலாப மடிக்கும் முதலாளிகளோ சாமான்களை பதுக்கி இரட்டிப்பு விலைக்கு விற்பனை செய்கின்றார்கள். இதனைத் தடுக்க இதுவரையில் அரசாங்கம் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10—வது மகத்தான வாரம்

"தேவனே என்னைப் பாருங்கள்"



**சென்ட்ரல்** (மருதானை) **ராணி** (யாழ் நகர்) **ஜோதி** (திருகோணமலை)

**சிவாஜிகணேசன், சாரதா,**

**விஜயநிர்மலா, மனோரமா, சுந்தரராஜன்**

**வீ. கே. ராமசாமி, நடிக்கும்**

# ஞான † ஒளி

டைரக்ஷன்:— பி. மாதவன் பீ. ஏ.

சென்னையில் 100 நாட்களுக்குமேல் ஓடிய மகத்தான திரையோவியம்

---

தமிழ் நாட்டில் வெள்ளி விழா கொண்டாடி ஈழத்திலும் வெற்றிமுரசு கொட்டுகிறது!

## 4வது மாதம்!



**கெப்பிட்டல்** (கொழும்பு) **வெலிங்டன்** (யாழ்ப்பாணம்) **வெம்பிளி** (கண்டி)

**சிவாஜிகணேசன், வாணிஸ்ரீ,**

—நடித்த—

# வசந்தமாளிகை

(ஈஸ்ட்மென் கலர்)

---

...ரம் **கிங்ஸ்லி** (கொழும்பு)

...னி, சிவகுமார், மனோகர், சுந்தரராஜன், சோ, நடித்த **தேரோட்டம்**

---

## 5வது வாரம் கெபிட்டி

குடும்ப கௌரவத்தை காப்பாற்ற முயற்சித்தாள் ஓர் பேதைப்பெண் அதில் அவள் வெற்றி பெற்றளா?

**ஜெய்சங்கர், நாகேஷ், வாணிஸ்ரீ, ஆனந்தன்,**

—நடித்த—

**அத்தைமகள்**

படத்தின் முடிவை யாரிடமும் கூறிவிடாதீர்கள்

---

## 4வது வெற்றி வாரம்

கைதிகளும் தெய்வங்களாகலாம்
ஆனூர்கள் — எப்படி — விடைகாண விரையுங்கள்

**செல்லமகால்** (கொட்டாஞ்சேனை) **இம்பீரியல்** (மட்டுநகர்) **வின்சர்** (யாழ்நகர்)

திரைகளில்

# மூன்று தெய்வங்கள்

(ஈஸ்ட்மன் கலர்)

சிவாஜி
நாகேஷ்
முத்துராமன்
S. V. சுப்பையா
சிவகுமார்

V. S. ராகவன்
M. R. R. வாசு
மூர்த்தி
சந்திரகலா
கௌசல்யா

டைரக்ஷன் x—x—x தாதாமிராசி

திரை கதை வசனம் கோபு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்கா மாவத்தை 194 ஏ. இலக்கத்தில் 1973ம் வருடம் ஏப்ரல் மாதம் 29ம் திகதி ஞாயிற்றுக் கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.